விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 27 திங்கட்கிழமை (09.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 112

ரா ம் கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# புலிகள் இயக்கம் வாழ்வதை ஜெனிவா சென்று கண்டோம்!

## அமைச்சர் றிசாட் தெரிவிப்பு



(கிண்ணியா)

புலிகளுடைய போராட்டம் முடிந்துவிட்டது. அந்த இயக்கம் அழிந்து விட்டது என நாம் பேசிக் கொண்டிருந்தாலும் அந்த இயக்கம் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதை ஜெனிவா சென்றபோது அறிய முடிந்தது என கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கிண்ணியா பிரதேச முஸ்லிம்கள் எதிர்நோக்கியுள்ள காணிப் பிரச்சினைகள் தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை கிண்ணியா நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு முதலமைச்சருடன் இந்தியத் தூதுவர் பேச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் மகாத்மா காந்தியின் சிலை உடைக்கப்பட்டமை குறித்து கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனுடன் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா பேசியதாக ஹிந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

சிலை சேதப்படுத்தப்பட்டமை குறித்து இந்தியா பேசியதுடன் காந்தியின் சிலையை மீளமைக்குமாறும் கோரியது. இலங்கை வெளிவிவகார செயலாளர் கே.அமுனுகமவுடன் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா கலந்துரையாடினார். இந்தியாவின் கவலையை அவர் தெரிவித்ததுடன் இச்சம்பவம் குறித்து

(19ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கம்-கூட்டமைப்பு பேச்சுக்கு மத்தியஸ்தம் தேவையில்லை-சம்பந்தன்

(கொழும்பு)

அரசுக்கும் தமிழ்க் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லையென கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் அதில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையென கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் குரல் கொடுக்கின்றார்கள்.

ஆனால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லையென தெரிவித்ததாக சில ஊடகங்கள் செய்திவெளியிட்டன. இதுகுறித்து இரா.சம்பந்தன் தெரிவிக்கையில்,

எமது பேச்சுவார்த்தை ஸ்தம்பிதம் அடைந்திருப்பது உண்மை. இது எல்லோரும் அறிந்த விடயம்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## குமார் குணரட்ணத்தை மீட்க அவுஸ்திரேலியா கோரிக்கை

(கொழும்பு)

மக்கள் போராட்ட இயக்கத்தின் தலைவர் பிரேம்குமார் குணரட்ணத்தை கண்டு பிடித்து தருமாறு அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் தற்போது வசிக்கும் அவரது மனைவி டாக்டர் சம்பா சோமாரட்ண அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்ற தனது கணவரை கண்டு பிடித்து தருமாறு ஐ.நா. விடமும் அவுஸ்திரேலிய அரசிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

கடந்த ஆண்டு டிசம்பரில் ஜே.வி.பியிலிருந்து பிரிந்து உருவான மக்கள் போராட்ட இயக்கத்தினர் பல்வேறு மனித உரிமை செயற்பாட்டு போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

இந்த அமைப்பினர் அண்மையில் உருவாக்கிய முன்னிலை சோசலிஷக் கட்சியினர் ஏப்ரல் 9ஆம் திகதி (இன்று) கட்சியின் முதலாவது மாநாட்டை

(19ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை இளைஞன் கடத்தப்பட்டதாக முறையீடு

(திருகோணமலை)

திருகோணமலை அன்புவழிபுரத்தில், கடந்த வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் 27 வயது நிரம்பிய இளைஞரொருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டதாக அவருடைய தாயார் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

திருகோணமலை அன்புவழிபுரத்தைச் சேர்ந்த ரவிந்திரர் ரகுமாறன் என்ற வான் சாரதி கடத்தப்பட்டதாக அவரின் தாயார் தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது சரிதான்

### சிதம்பரம் உறுதிபடத் தெரிவிப்பு



(சென்னை)

இலங்கைக்கு எதிராக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையகத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு அளித்தது சரியான முடிபுதான் என்று இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

இந்தத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு வந்த போது அதனை 15 நாடுகள் எதிர்த்திருந்தன என்றாலும் இந்தியாவின் ராஜிய முயற்சிகள் மூலம் சவுதி அரேபியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் தமது நிலைப்பாட்டை எதிர்காலத்தில் மாற்றிக்கொள்ள

(02ஆம் பக்கம் பார்க்க)

## சகதிக்குள் புதையுண்ட 2 சிறுவர்கள் உயிரிழப்பு

### மிருசுவிலில் சம்பவம்

(மிருசுவில்)

குளத்தினுள் உள்ள சகதிக்குள் புதையுண்டு இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். இச் சம்பவம் நேற்றுமாலை மிருசுவில் வடக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த உறவினர்களான செல்வகுமார் சஸ்மிதா (வயது 03) சந்திரகுமார் பிருந்தன் (வயது 04) ஆகிய இரண்டு சிறுவர்களுமே உயிரிழந்தவர்களாவர்.

நுங்கு எடுப்பதற்கென அருகில் உள்ள பனங்காணிக்

(20ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் நாடுகளுக்கு நன்றி தெரிவிக்க அரச பிரதிநிதி சவுதிக்கு விஜயம்!

(ஜெனிவா)

ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் நடுகளுக்கு நன்றி தெரிவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கிணங்க, சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா இன்று திங்கட்கிழமை சவூதி அரேபியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரிலேயே, இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் நாடுகளுக்கு நன்றி தெரிவிப்பதற்காக குறித்த நாடுகளுக்கு விஜயம்

(19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மானிப்பாய் அறநெறி பாடசாலை பரிசளிப்பு விழா நாளை

(மானிப்பாய்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினரால் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழா -2012 நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணியளவில் அறநெறி பாடசாலை அதிபர் வே.தம்பாபிள்ளை தலைமையில் மருதடி விநாயகர் ஆலய அறநெறி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார திணைக்கள ஓய்வு நிலை பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கமும், விசேட விருந்தினராக மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் எஸ்.கே. உதயசூரியரும் கலந்து கொள்ளவுள்ளனர்.(எ)

## வளர்ப்பு நாய் கடித்து குழந்தைகள் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொழும்புத்துறைப் பகுதியில் வளர்ப்பு நாய் கடித்ததில் இரண்டு குழந்தைகள் காயத்துக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் றொ.ஜெனிசா (ஆறு மாதக் குழந்தை) து.சதுசன் (வயது -2) ஆகிய இரண்டு குழந்தைகளே காயத்துக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-6)

# ஐ.தே.கவுடனான மே தின கூட்டு முயற்சி தமிழ் அரசியலை சிதைக்கும் செயற்பாடு

## கூட்டமைப்புக்கு த.தே.ம.மு. கண்டனம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியுடன் ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணத்தில் நடத்த முடிபு செய்துள்ள மே தின நிகழ்வு தமிழ்த் தேசிய அரசியலை பேரினவாதத்தினுள் கரைக்கும் ஒரு சதி முயற்சி என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம் வெளியிட்டுள்ளது.

அத்துடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் இந்த முயற்சிகளுக்கு மனோ கணேசன், விக்கிரமபாகு கருணாரட்ன ஆகியோர் ஆதரவு வழங்குவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை இந்த மேதின நிகழ்வுகளை யாழ்.மக்கள் புறக்கணிப்பதன் மூலம் இச்சதி முயற்சிக்கு தாம் ஒருபோதும் துணை நிற்க மாட்டோம் என்பதை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும் என்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய தேசியக் கட்சி வருகின்ற மே தினத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பின் உதவியோடு யாழ்ப்பாணத்தில் நடத்த முடிபு செய்துள்ளது.

இது தமிழ்த் தேசிய அரசியலை பேரினவாதத்தினுள் கரைக்கும் ஒரு சதி முயற்சி. இதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இன்று இலங்கைத் தேசியம் என எதுவுமில்லை. அதற்கான பன்மைத்துவ கட்டமைப்புக்கு சிங்கள தேசம் தயாராக இல்லை. தென்னிலங்கையில் இரு பிரதான கட்சிகளிடமும் இருப்பது சிங்களத் தேசியம் தான். இது விடயத்தில் இரு பிரதான கட்சிகளிடத்தேயும் பெரிய வேறுபாடுகள் எதுவும் கிடையாது.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வருவது பேரினவாத அரசியலுக்குள் தமிழ் தேசிய அரசியலை கரைப்பதற்கு வழிவகுப்பதாகவே அமையும்.

போருக்கு பின்னர் பேரினவாதிகளின் பிரதான இலக்கும் அதுதான்.

ஒரு பக்கத்தில் நிலப் பறிப்பு, தொழில் பறிப்பு, வளப் பறிப்பு பௌத்த மதத் திணிப்பு, கலாசார அழிப்பு, தமிழ் மொழி அழிப்பு என தமிழ் மக்களின் இருப்பை சிதைக்கும் வேலைத்திட்டத்தினை பேரினவாதிகள் தீவிரமாக முடுக்கிவிட்டுள்ளனர். பேரினவாத நிறுவனங்கள், அரசாங்கம் இராணுவம், பௌத்த பிக்குமார்கள் என்போரின் கூட்டு முயற்சியாக இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கிழக்கு முழுமையாக ஏப்பமிடப்பட்டுள்ள நிலையில் வடக்கிற்கும் இவ் ஆக்கிரமிப்பு பாய்கின்றது.


மேற்படி மே தினக் கூட்டத்தில் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியும், விக்கிரமபாகு கருணாரட்ன தலைமையிலான நவசமாஜக் கட்சியும் கலந்துகொண்டு ஆதரவு வழங்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களது சுயநிர்ண உரிமை மற்றும் தாயகக் கோட்பாடு என்பவற்றை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டிருந்த இவ்விரு தரப்பினரும் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்வதனை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தமிழ்த் தேசிய வாதத்தை சிங்கள தேசிய வாதத்தினுள் கரைப்பதற்காக மேற்கொள்ளும் இந்த முயற்சிக்கு மனோ கணேசன் மற்றும் விக்கிரமபாகு கருணாரட்ன ஆகியோர் ஆதரவு வழங்குவதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாண மக்கள் இம் மேதினத்தை புறக்கணிப்பதன் மூலம் இக்கரைப்பு நடவடிக்கைகளுக்கு நாம் ஒருபோதும் துணை நிற்க மாட்டோம் என்பதனை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# இந்தியா சென்ற பாக்.ஜனாதிபதி மன்மோகன் சிங்குடன் சந்திப்பு



(புதுடில்லி)

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, பிரதமர் மன்மோகன் சிங்கை அவரின் அதிகாரபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை நம்பிக்கை அளிக்கும் வகையிலும், நட்பு ரீதியாகவும் அமைந்திருந்ததாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி முன்வந்தமை குறித்து மகிழ்ச்சியை வெளியிட்ட பிரதமர் மன்மோகன் சிங், பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு அவர் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டதாகவும் கூறியுள்ளார்.

அதேவேளை, இப்பேச்சுவார்த்தை குறித்து பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி கூறும்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகள் குறித்த பேச்சுவார்த்தை மிகவும் மகிழ்ச்சி அளிக்கும் வகையில் அமைந்திருந்தாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியாவுடன் மேலும் உறவுகளை வளர்த்துக் கொள்ள விரும்புவதாகத் தெரிவித்த அவர், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை விரைவில் பாகிஸ்தான் மண்ணில் சந்திப்பேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் விமானப்படை விமானம் மூலம் நேற்று புதுடில்லிக்குச் சென்ற பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரிக்கு விமான நிலையத்தில் இந்திய அரசின் சார்பில் மத்திய அமைச்சர் பவன் குமார் பன்சால் வரவேற்றார்.

இதையடுத்து இந்திய பிரதமரின் அதிகாரபூர்வ வாசஸ்தலத்துக்குச் சென்ற பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரிக்கு பிரதமர் மன்மோகன் சிங் மதிய உணவு விருந்து அளித்து கௌரவித்தார். இதன்போது ராகுல் காந்தியும் கலந்து கொண்டார்.

7 ஆண்டுகளுக்கு பின்னர் இந்தியாவுக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியுடன் அவரின் மகன் பிலாவல் சர்தாரி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் 13 பேர் உட்பட மொத்தம் 40 பேர் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மாடியிலிருந்து வீழ்ந்து பெண் உயிரிழப்பு

மாத்தளை யட்டவத்த வாலவெல பிரதேசத்தில் உள்ள இரு மாடிகள் கொண்ட வீட்டின் மேல் தளத்தில் இருந்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

ஒரு பிள்ளையின் தாயான 39 வயதான பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக அப்பெண்ணின் கணவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

## இலங்கைக்கு எதிரான...

வைப்பதென்பதும் சாத்தியமே என சிதம்பரம் தெரிவித்தார்.

தமிழகத்தில் கூடன்குளம் அணு மின் நிலையம் திறக்கப்பட இருப்பதை பாராட்டி தமிழக காங்கிரஸ் கட்சி ஏற்பாடு செய்திருந்த ஒரு கூட்டத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் சிதம்பரம் இக்கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மீதான தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு அளித்தது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை சரியான பாதையில் செல்வதென்பதன் அறிகுறி.

இறையாண்மையுள்ள தனிநாடு ஒன்றின் மீதான நடவடிக்கை இத்தீர்மானம் என்பதால் இந்தியா அது தொடர்பில் ஒவ்வொரு கட்டத்திலும் கவனமாக செயற்பட்டு முடிபெடுத்தது என சிதம்பரம் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் பிற நாடுகளுக்கும் ஒரு வலுவான சமிக்ஞையை தரும் நோக்கத்தில் இந்தியா இத்தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கியதாக அவர் கூறினார்.

கூடன்குளம் அணுமின் நிலையம் தொடர்பில் அரசாங்கம் மக்களின் கவலைகளை செவிமடுத்தது என்றும் ஆனால் நிபுணர் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் மின் நிலையத்தைத் திறக்க அது முடிபெடுத்துள்ளதென்றும் ஆராய்ந்து எடுக்கப்பட்ட இந்த முடிபிலிருந்து மத்திய அரசு பின்வாங்காது என்றும் சிதம்பரம் தெரிவித்திருந்தார்.

தமிழக காங்கிரஸ் குழுவின் முன்னாள் தலைவர்கள் கே.வி.தங்கபாலுவும், ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனும் இந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூடங்குளம் அணு மின்நிலையத்தில் உருவாக்கப்படும் அனைத்து மின்சாரத்தையும் மத்திய அரசு தமிழக அரசுக்கே வழங்கி தமிழகத்தில் மின் பற்றாக் குறையை போக்க வேண்டும் என்ற தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கோரிக்கையை ஆமோதித்திருந்தனர்.

(தொடர்புடைய செய்தி உள்ளே) (எ-11)


**நன்றி தெரிவிக்கின்றேன்**

மாவட்ட ஆயுள் வேத வைத்தியசாலை குருநகர், யாழ்ப்பாணம்

பொறுப்பதிகாரி உட்பட முறிவு தறிவு வைத்தியச் சேவை மிகவும் திறமையுடன் நடைபெறுகின்றது.

நாவாந்துறை பத்தறீனா ஆகிய எனது தோள்மூட்டு நோ சம்பந்தமாகச் சென்று வைத்தியம் செய்து சுகமடைந்துள்ளது. எனவே வைத்திய நிர்வாகிகளுக்கும் எனக்கு உதவிய சகலருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

தகவல்: ம. மரியதாஸ்
பி. கத்தறீனா

(C-6322)

**ஆனந்தி திருமண சேவை**
**மணமகன் தேவை**

வர்த்தகப் பட்டம் பெற்ற அரசுத் துறையில் பணியாற்றும் 76இல் பிறந்த உத்தராடம்/ 2இல் செவ்வாய், கிரகபாவம் 53 கொண்ட பெண்ணுக்கு மணமகன் வேண்டும். தபால்/நேரடி/ 0212228708 மூலம் தொடர்பு கொள்ளலாம். முகவரி V.A. சிவராசா சோதிடர், 52, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (8133)

**கரபந்தாட்ட போட்டி (ஓவகேம்)**

புதன்கிழமை (11.04.2012) பருத்தித்துறை, மாதனை விளையாட்டுக் கழகத்தினால் 5 பேர் கொண்ட போட்டி ஆரம்பமாகவுள்ளது. உங்களது கழகத்தின் பெயரை செவ்வாய் காலை 10 மணிக்கு முன்பு பதிவு செய்து கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :- 0775907220
0776064239, 0776176499

(C-6319)




**வீடு விற்பனைக்கு**

அளவெட்டி அலுக்கைச் சந்தியிலிருந்து அம்பனைக்கு போகும் றோட்டில் (அளவெட்டி மத்தி) 5 1/4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0114949234

(8113)

# இன்று ஒரு தகவல்

## தலைச் சுற்றல்

‘‘சேர்! காலையிலே எழுந்ததிலிருந்து தலை சுற்றிக் கொண்டே இருக்கிறது’’ என்று சொல்லிக் கொண்டே ஒருவர் இருந்தார்.

நிமிர்ந்து பார்த்தேன். அவர் தலை அப்படியேதான் இருந்தது. சுற்றவில்லை.

தலை நேராகத்தானே சேர் இருக்கிறது என்றேன்.

‘‘உங்களுக்கு என்ன சேர்! கிண்டலாகத்தான் இருக்கும். அந்தந்த துன்பம் அவரவர்களுக்கு வந்தால் தான் புரியும்’’ என்றார்.

அது இருக்கட்டும் சேர். தலை கிறுகிறுப்பாக இருந்தால் ஏன் என்னைத் தேடி வந்தீர்கள் என்று கேட்டேன்.

‘‘எல்லாம் காரியத்துடன்தான் வந்திருக்கிறேன். அதை பின்னர் கூறுகிறேன். இப்போது நீங்கள் எனக்கு சொல்லுங்கள்’’ என்று சொன்னார்.

என்ன சொல்ல வேண்டும் என்று கேட்டேன்.

‘‘தலைச்சுற்றல் வருவதற்கு என்ன காரணம்?’’ என்று கேட்டேன்.

உடம்பினுள்ளே ஏதோவொரு கோளாறு நமக்கு இருப்பதை முன்கூட்டியே அறிவிப்பாகக் கூறுவதுதான் இது.

**B.P.** என்று சொல்கிறோமே இரத்தக் கொதிப்பு; அது உடம்பிலே இருக்கிறதா என்பதை அடிக்கடி பரிசோதித்துப் பார்த்துக்கொள்ளல் வேண்டும்.

இரத்தக்குழாய் தடித்து இருப்பதை அறிந்து கொண்டால், கொழுப்பு, இனிப்பு ஆகியவற்றை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

உங்களுக்கு புகைப்பிடிக்கும் பழக்கம் உண்டா? மதுப் பழக்கம் உண்டா? இப்படியெல்லாம் இருந்தால் தலை சுற்றல் இருக்கும். அந்தப் பழக்கத்தையெல்லாம் விட்டு விட்டால் இந்தத் தொந்தரவு இருக்காது.

இந்த உலகம் சுற்றிக் கொண்டே இருக்கிறது என்று ஒருவர் உங்களிடம் சொன்னால் உடனே அவர் பெரிய விஞ்ஞானி என்று நினைக்க வேண்டாம். ஏனென்றால் தண்ணீர் (சாராயம் குடிப்பவர்கள்) சாமிகள் கூட அப்படித்தான் சொல்லுவார்கள்.

சில பேருக்கு பித்தத்தினால் தலைச்சுற்று ஏற்படும். இதற்கு நமது வீட்டிலேயே மருந்து கிடைக்கும்.

இரசாயன தொழிற்சாலையிலே வேலை செய்கிற சிலருக்கு தலைசுற்றுவது வழமை. அங்கே இருக்கும் சூழல் ஒத்துக்கொள்வதில்லை. அதனாலே தலையிலே ஒரு கிறுகிறுப்பு தெரியும்.

சில பேர் எதுக்கெடுத்தாலும் உடனே ஒரு தூக்க மாத்திரையை தேடி செல்வார்கள். இல்லையென்றால் தலைவலி மாத்திரையை வாங்கிப் போட்டுக் கொள்வார்கள்.

தூக்க மாத்திரை, தலைவலி மாத்திரை இதையெல்லாம் அளவுக்கு அதிகமாக உபயோகிப்பவர்களுக்கு தலை சுற்றல் வரும்.

சிலருக்கு நரம்பு மிகவும் பலவீனமாக இருக்கும். அவர்களுக்குக்கூட இந்தப் பிரச்சினை இருக்கும். நரம்பு பலவீனத்தை சீர்செய்தால் இந்தத் தொந்தரவு சரியாகி விடும்.

நமது உடல் சீராக இருந்தால்தான் மனம் உற்சாகமாக இருக்கும். அதனால் கெட்ட பழக்கவழுங்கங்களை விட்டு விட்டால் வாழ்நாள் பூராகவும் துன்பம் இல்லாமல் சுறுசுறுப்பாக இருக்கலாம்.

இவ்வளவு விபரத்தையும் என்னிடம் வந்த அந்த தலைசுற்றல் ஆசாமியிடம் சொல்லி முடித்தேன் என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கடற்றொழில் அபிவிருத்திக்கு 26 மில்லியன் ரூபா ஓதுக்கீடு

## நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு சுமார் 26 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சினால் இந்த வருடம் மேற்கொள்ளப்பட வேண்டிய மாவட்ட கடற்றொழில் உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளுக்கென 26 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்களத்தினால் அமைச்சிடம் சுமார் 40 மில்லியன் ரூபா நிதி வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய சுமார் 26 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியுதவியுடன் யாழ். மாவட்டத்தில் கடற்றொழில் சார்ந்த பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம். அத்தோடு சில கட்டடங்களையும் புனரமைக்க திட்டமிட்டுள்ளோம்.

முழுத்தேவைகளையும் பூர்த்தியாக்குவதற்கு இந்த நிதி போதுமானதாக இல்லை. மீண்டும் நிதியுதவிகளுக்கான வேண்டுகோள் விடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் யாழ். மாவட்டத்தில் கடற்றொழிலைப் பொறுத்தவரை பல மில்லியன்ரூபா செலவில் இன்னும்அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளது.

மீனவர்கள் தொழில் நடவடிக்கைகளை இலகுவான முறையில் மேற்கொள்ள பல பகுதிகளில் இன்னும் இறங்கு துறைகள் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் மீனவர்கள் தமது பகுதிகளில் இறங்கு துறைகளை அமைத்து தொழில் நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ள உதவிகள் வழங்குமாறு வேண்டுகோள் விடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# கமக்கார அமைப்புக்களுக்கான தேர்தல்; மே மாதம் முதல் வாரத்தில்

பூநகரி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட 20 கமக்கார அமைப்புக்களுக்குமான தேர்தல்கள் கிராம ரீதியாக மே மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளதர்க பூநகரி கமநல சேவை நிலைய அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்மாத முடிவிற்குள் அங்கத்துவ இடாப்பைப் பூரணப்படுத்தி கமத்தொழில் சேவை நிலையத்தில் ஒப்படைக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். இதற்காக கமநல சேவை நிலைய கமக்கார அமைப்புக்கள் இம்மாதம் 17 ஆம் திகதியுடன் கலைக்கப்படவுள்ளது.

இவ்வமைப்பின் பதவிக் காலம் கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-84)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 60 |
| பச்சைமிளகாய் | 40-50 | 50 | 30 |
| தக்காளி | 50 | 60 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 30 | 30 |
| கோவா | 20 | 10 | 15 |
| கரட் | 40 | 50 | 40 |
| பூசணி | 20 | 30 | 30 |
| புடோல் | 40 | 40 | 20 |
| வாழைக்காய் | 30-35 | 30 | 25 |
| சின்ன வெங்காயம் | 50 | 60-90 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 60 |
| பாகற்காய் | 110 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | -- |
| பயற்றங்காய் | 100 | 40 | 50 |
| லீக்ஸ் | 70 | 70 | 60 |
| பீற்றூட் | 35 | 20 | 20 |
| கறிமிளகாய் | 50 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 300-350 | 300 | 300 |
| போஞ்சி | 50 | 60 | 40 |
| கத்தரிதம்புள்ள | -- | 30 | 20 |
| கீரை - 1 பிடி | 15-20 | 30 | 20 |
| தேசிக்காய் | 40-45 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 30 | 30 |

# இராசி பலன்

*09.04.2012*
*(பங்குனி 27, திங்கட்கிழமை)*
*திருதியை மாலை 6.37 மணிக்கு*
*விசாகம் முன்னிரவு 8.45 மணிவரை*
*இராகுகாலம் 7.36-9.06 மணிவரை*
*சுபநேரம் 12.06-1.36 மணிவரை*

**மேடம்** உற்றார்,உறவினர் வழியில் சுப விரயங்கள் அதிகரிக்கலாம், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது,குழப்பங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள், புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலம் சீராகும்.

**மிதுனம்** தொழிலில் கூட்டாளிகளிடம் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், மாலை நேரங்களில் கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** விருந்தினர் வருகையுண்டு,உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வியாபாரத்தை விருத்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், தாய் வழி அனுகூலமுண்டு, வாகன சுகமுண்டு, சுப செய்திகளால் மனமகிழ்வடைவீர்கள், புதிய பொருட்கள் வாங்குவதில் நாட்டம் காட்டுவீர்கள்.

**கன்னி** தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படும் நாள், எடுத்த செயலை எளிதில் செய்து முடிப்பீர்கள், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், புதிய பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** பெரிய மனிதர்களின் உதவியால் புதிய பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள், புத்தி சாதுரியமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.

**விருச்சிகம்** நினைத்த காரியத்தை செய்து முடிக்க பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு,பணவரவு திருப்தி தரும், பயணங்களால் பலனுண்டு,ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**தனுசு** நண்பர்கள் வழியில் சிறுவிரயங்கள் ஏற்படலாம், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை அமையலாம், சயன சுகக்குறைவான நாள், பொறுப்புக்கள் அதிகரிக்கும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், திட்டமிட்ட காரியங்கள் கைகூடும், தொழில் ரீதியாக நல்ல முடிவு எடுப்பீர்கள்,வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**கும்பம்** மனதிற்கிய தகவல்கள் வந்து சேரும் நாள், தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும்,நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு,பிறர் உதவிகள் கிடைக்கலாம்.

**மீனம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், தொழில் ரீதியான பயணங்களால் நன்மையடைவீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், உடல் நலம் சீராகும், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

வளவன்




கடந்த வாரம் பிரிட்டிஷ் பயணிகள் சொகுசுக் கப்பலான குயின் எலிஷபெத் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பலையும் அக்கப்பலில் வந்த 2000 இற்கும் மேற்பட்ட பயணிகள் கொழும்பு நகரை வலம்வர சைக்கிளில் சவாரி செய்வதையும் படங்களில் காணலாம்.

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டை

## பணிகளில் இந்திய நிறுவனம்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கான உட்கட்டமைப்பு நடவடிக்கைகள் இந்திய நிறுவனம் ஒன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இக் கைத்தொழிற் பேட்டையின் நிர்வாக கட்டிட நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் மின்சாரம், நீர் மற்றும் உள்ளக பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு நடவடிக்கைகள் இந்திய நிறுவனம் மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை 200 மில்லியன் ரூபாய் இந்திய நிதி உதவியுடன் நிறுவப்படவுள்ளதுடன் இத் தொகையில் இந்திய அரசாங்கம் 174 மில்லியன் ரூபாயை நன்கொடையாக வழங்கும் அதேநேரம் 26 மில்லியன் ரூபாயை இலங்கை அரசு செலவு செய்யும்.

இது தொடர்பில் முக்கிய கலந்துரையாடலொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது. மேற்படி அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் முதலீடு செய்வோர் சம்பந்தமாகவும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இக் கைத்தொழில் பேட்டையில் முதலீடு செய்வதற்கு 52 நிறுவனங்கள் ஆர்வம் காட்டியுள்ளதாகவும் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சிவஞானஜோதி குறிப்பிட்டுள்ளார்.




# கடந்த வாரம் பங்குச்சந்தை

பங்குசந்தை நடவடிக்கைகள் கடந்த வாரமும் தொடர்ச்சியான இரண்டாவது வாரமாக சுமுகமான முறையில் வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கிறது.

வெளிநாட்டு முதலீட்டாளகளின் பங்களிப்பு கடந்த வாரம் மொத்த சந்தை நடவடிக்கையில் 19.4 வீதமாக அமைந்திருந்தது. இவர்கள் அதிகளவு பங்கு கௌ்வனவில் ஈடுபட்டதையும் கடந்த வாரம் அவதானிக்க முடிந்தது. அனைத்து பங்கு விலைச் சுட்டெண் தொடர்ந்தும் 5400.00 புள்ளிகளை அண்மித்து காணப்பட்டது.

ஏப்ரல் 2ஆம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூபாய் 3.989,482,350 அமைந்திருந்தது. கடந்த வாரம் மொத்தமாக 22,184 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் 21,356 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 818 ஆகவும் பதிவாகியிருந்தன. முன்னைய வாரத்துடன் ஒப்பிடுகையில் மொத்த கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியை காண்பித்திருந்தது. கடந்த வெள்ளிக்கிழமை பௌர்ணமி தினத்தை முன்னிட்டு பங்குச்சந்தை நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 90 புதிய ஹோட்டல்கள் அனுமதிக்காக காத்திருப்பு

1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சுமார் 90 புதிய ஹோட்டல் திட்டங்கள் இலங்கையில் நிறுவுவதற்காக அனுமதி கோரியுள்ளதாகவும், இதற்கான அனுமதி வழங்குவது குறித்து இலங்கை அரசு ஆராய்ந்து வருவதாக இலங்கை சுற்றுலா சபை அறிவித்துள்ளது.

# பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5420.20 | 5423.25 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4891.58 | 4893.67 ⇧ |

புரள்வு (ரூபா.மில்.) 3,989.48

**விலை அசைவுகளின் அடிப்படையில்**

***உயர்வடைந்த பங்குகள்(ரூ)*** ஒபிஸ் ஈகுப்மன்ட் (406.30), சலிமர் (1219.90) ஈகுவிட்டி(33.60), சிலோன் ரொபாக்கோ(599.00), கூஜே(109.90)

***சரிவடைந்த பங்குகள்(ரூ)*** சுவர்ணமஹால் பினான்ஸ்(8.40), றிஜ்னிஸ் (110.50), சொப்ட்லொஜிக் கப்(8.10), செரண்டிப் லான்ட்(1477.80), எல்பிட்டிய(13.90).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# இலங்கையின் சிறந்த வங்கியாக கொமர்ஷல் மீண்டும் தெரிவு

COMMERCIAL BANK
*Our Interest is in You*

அமெரிக்காவை மையமாகக் கொண்டு வெளிவரும் சஞ்சிகையான குளோபல் பினான்ஸ் இலங்கையின் சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கியை தொடர்ந்து 14 –வது வருடமாக தெரிவு செய்துள்ளது.

வளர்முக நாடுகளின் ஆசிய பகுதியில் சிறந்த வங்கிகளை ஆய்வு மூலம் தெரிவு செய்து எதிர் வரும் மே மாதத்தில் இவ் அறிக்கை வெளிவர இருக்கிறது.

கொமர்ஷல் வங்கியுடன் ஆசிய வங்கிகளின் மிகப் பெரும் வங்கிகளான சைனா கொன்ஸ்ரக்சன் வங்கி (சீனா), ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி (இந்தியா), கொரிய எக்ஸ்சேன்ஞ் வங்கி (கொரியா), சைனா ரஸ்ட் கொமர்ஷியல் வங்கி (தாய்வான்), மத்திய/ கிழக்கு ஐரோப்பாவில் யூனி கிரடிட் வங்கி (ரஷ்யா), ஆபிரிக்காவில் ஸ்ரான்டட் பாங் ஒப் சவுத் ஆபிரிக்கா, நசனல் பாங் (குவைத்), எமரேட்ஸ் என்டிபி வங்கி (ஐக்கிய அரபு இராஜ்ஜியம்) மத்திய கிழக்கு பிராந்தியத்திலும் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

# யாகூவில் 2000 தொழில்கள் பறிபோகின்றன



மில்லியன் கணக்கான டொலர்களை யாகூ சேமிக்கும் நோக்குடனும் ஒரு சிறந்த இலாபமுடைய இணையத்தளமாக்கும் நோக்குடனும் புதிய பிரதான நிறைவேற்று அதிகாரியாக பதவியேற்கும் ஸ்கொட் தொம்சன் பல அதிரடி நடவடிக்கைகளை அறிவித்துள்ளார்.


வர்த்தக ரீதியாக கூகுள் மற் றும் பேஸபுக் இணையங்களுடன் போட்டி போடுவதில் முன்னைய யாகூ நிறைவேற்று அதிகாரிகள் தோல்வியை சந்தித்துள்ள நிலையில் ஸ்கொட் தோம்சன் தனது புதிய பணிகளை ஆரம்பிக்கின்றார்.

கலிபோர்னியாவை மையமாக கொண்டியங்கும் யாகூ 2011 ஆம் ஆண்டு இறுதியில் 14000 தொழிலாளர்களை வேலையில் அமர்த்தியிருந்தது.

எனவே 2000 தொழிலாளரை இடைநிறுத்துவதன் மூலம் வருடத்திற்கு 375 மில்லியன் டொலரைச் சேமிக்கமுடியும்எனயாகூ நம்புகிறது.

# பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு

## பதில் பணிப்பாளர் நாயகம் நியமனம்



இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பதில பணிப்பாளர் நாயகமாக கலாநிதி திஸ்ஸ பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏப்ரல் 2 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜெயவர்த்தபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் நிதியியல் பேராசிரியராக கலாநிதி திஸ்ஸ பண்டார கடமையாற்றினார்.

இதேவேளை, திறைசேரியினை பிரதி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல மற்றும் கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியின் சட்ட பீடத்தின் தலைவர் பிரதீப் மகாநாம ஆகியோர் இவ் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 123.69 | 127.21 |
| பீவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 196.05 | 202.97 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 161.72 | 168.14 |
| சுவிஸ் பிராங் | 134.12 | 140.11 |
| கனேடிய டொலர் | 123.23 | 128.46 |
| அவுஸ்திரேலிய டொலர் | 126.10 | 131.75 |
| சிங்கப்பூர் டொலர் | 97.63 | 101.63 |
| ஜப்பான் யென் | 1.49 | 1.55 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.46 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.15 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# யாழில் கால்பதித்த எல்கார்டோ

இலங்கையின் முன்னணி சுழல் கதவு உற்பத்தியாளரும் நாட்டின் உருக்கு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் எல்காடோ இன்டஸ்றீஸ் லிமிட்டெட் காட்சி அறை ஒன்றையும் வியாபாரக் கிளை ஒன்றையும் யாழ்ப்பாணத்தில் இல. 328, பருத்தித்துறை வீதியில் திறந்துள்ளது.

பல அரச பொதுத் துறை அதிகாரிகள் உட்பட யாழ்.வலய வாடிக்கையாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இயந்திர வசதிகள் கொண்ட தொழிற்சாலையொன்றை அச்சுவேலியிலுள்ள கைத்தொழில் பேட்டையில் திறந்து யாழ். மாவட்டத்திலுள்ள இளைஞருக்கு தொழில் வழங்கி யாழின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் நோக்கமிருப்பதாகவும் எல்கார்டோ தலைவரான அத்துல ரோகண வீரரட்ண தனது உரையில் குறிப்பிட்டார். 1985ஆம் ஆண்டு எல்கார்டோ நிறுவப்பட்டது.

1995ஆம் ஆண்டு எல்காடோ பலவித ஆராய்ச்சிகளை மேற்கொண்டு 4 சக்கர சொகுசு வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெப்சியின் இந்திரா நூயி

## சம்பளம் ரூ.200 கோடி



(நியூயோர்க்)

பெப்சி நிறுவன தலைமை அதிகாரியும் இந்தியருமான இந்திரா நூயி சம்பளம் 6 சதவீதம் அதிகரித்துள்ளது. 2011ஆம் ஆண்டுக்கு அவர் ரூபாய் 200 கோடி பெற்றார்.

சென்னையில் பிறந்த இந்திரா நூயி பெப்சிகோ நிறுவனத்தின் சர்வதேச தலைமை அதிகாரியாக இருக்கிறார். 2011ஆம் ஆண்டுக்கு நூயி சம்பளம் மற்றும் படிகள், பங்கு ஒதுக்கீடாக மொத்தம் ரூபாய் 200 கோடி பெற்றுள்ளார்.

அதில் அடிப்படை சம்பளம் ரூபாய் 200 கோடி. இது 2006ஆம் ஆண்டு முதல் 2010 வரை ரூபாய் 15.3 கோடியாக இருந்தது.

2011இல் அவருக்கு சுமார் ரூபாய் 3.7 கோடி சம்பள உயர்வு அளிக்கப்பட்டது. ரூபாய் 120.2 கோடிக்கு நூயி பெப்சி நிறுவன பங்கு ஒதுக்கீடு பெற்றுள்ளார்.

ஊக்கத் தொகையாக 2011ஆம் ஆண்டுக்கு 37 கோடி தரப்பட்டுள்ளது. ஓய்வூதிய பலனாக 2011 இல் 37 கோடி தரப்பட்டது. மொத்தம் சேர்த்து 2010ஆம் ஆண்டை விட 2011இல் இந்திரா நூயி சம்பளம் 5.8 சதவீதம் அதிகரித்து. 2011ஆம் ஆண்டில் பெப்சி நிறுவனம் நட்டம் அடைந்தும் நூயி சம்பளம் உயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிரிக்கெட் இறுதிப்போட்டியில் பரு. ஐக்கிய அணி சம்பியன்



(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் பெண்களுக்கான கிரிக்கெட் இறுதிப் போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை 2 விக்கெட்டினால் தோற்கடித்து பருத்தித்துறை ஐக்கிய அணி சம்பியனாகியது.

வடமராட்சியில் 6 அணிகள் பங்குபற்றிய அணிக்கு 5 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டி அண்மையில் மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டயமன்ஸ் அணி 5 ஓவர் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிசா 40, துகா 8 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சின் சார்பில் சிந்தியா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை ஐக்கிய அணி 4.1 பந்துகளில் 3 விக்கெட்டுக்களை இழந்து 67 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது. இதில் சிந்தியா-43, டிலக்சனா-8 ஓட்டங்களைப் பெற்றனர்.

டயமன்ஸ் அணியின் பந்துவீச்சின் சார்பில் இந்துகா -2, தர்சிகா-1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். அரையிறுதி ஆட்டத்தில் திருவள்ளுவர் அணியை டயமன்ஸ் அணியும் மைக்கல் அணியை பருத்தித்துறை ஐக்கிய அணியும் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

(அ-3-24)

# ஒருநாளில் எட்டு விபத்துக்கள்; இருவர் அவசர சிகிச்சைப்பிரிவில்

(யாழ்ப்பாணம்)

புதுவருட காலப்பகுதி என்பதால் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் மட்டும் எட்டு விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

தற்போது புதுவருடக் காலம் என்பதால் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டு உள்ள வாகன நெரிசலும் வாகனம் செலுத்துபவர்களின் கவனமின்மையுமே இவ் விபத்துக்களுக்கு காரணம் என யாழ். பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அரியாலை, நாவலர் வீதி, கொக்குவில் கேணியடி, யாழ். நகர், பொற்பதி வீதி, சுன்னாகம் போன்ற இடங்களில் நடைபெற்றுள்ளது.

இதனால் இருவர் அவசர சிகிச்சைப் பிரிவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு அரியாலையில் ஏற்பட்ட விபத்துக் காரணமாக இளைஞர்களிடையே முறுகல் நிலையும் ஏற்பட்டுள்ளது.

தற்போது வாகன நெரிசல் அதிகமாக காணப்படுவதால் வீதிகளில் பயணிப்போரினை அவதானத்துடன் பயணிக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-4)

# கொடிகாமம் பொலீஸ் பிரிவினரின் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள்

தமிழ், சிங்கள புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கொடிகாமம் பொலிஸ் நிலையத்தினரால் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் அ.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மரதன் ஓட்டம், ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம், தலையணைச் சண்டை, முட்டி உடைத்தல், சங்கீதக்கதிரை, யானைக்குகண் வைத்தல், மெதுவான சைக்கிளோட்டம், முட்டை எறிந்து ஏந்துதல், பூசணிக்குள் இருக்கும் வித்துக்களை எண்ணுதல், கயிறு இழுத்தல், ஒளிந்து இருக்கும் நபரை கண்டு பிடித்தல், கரப்பந்தாட்டம் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன.

சைக்கிள்ஓட்டம், மரதன் ஓட்டம் போன்றவை அன்றைய தினம் காலை 6 மணிக்கு கொடிகாமம் நகரில் இருந்து ஆரம்பிக்கும் எனவும் ஏனைய நிகழ்வுகள் கொடிகாமம் நாவலடி அ.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெறுமெனவும் கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வை. எம். ஜெகத் பண்டார தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கான அனுசரணையை கொடிகாமம் வர்த்தக சங்கம், கச்சாய் கடற்தொழிலாளர் சங்கம், கொடிகாமம் தனியார் சிற்றூர்திச்சங்கம், பனை, தென்னை வள அபி விருத்தி கூட்டுறவு சங்கம் மற்றும் பொதுமக் களும் வழங்கவுள்ளனர்.

பங்குபற்ற விரும்பும் வீரர்கள் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-3-29)

# விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை கச்சேரி நல்லூர் வீதி சு.க.மையத்திலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நாவலர் வீதி நாற்சந்தியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை முத்தமிழ் வீதி முன்பள்ளி ஆடிய பாதம் வீதியிலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை ராணி வீதி சுகாதார கல்வி மையத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை சிவன் புது வீதியிலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை மணற்றரை லேன் சனசமுக நிலையத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

(அ-2)




# அன்பளிப்புப்பொருட்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தினால் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கர்ப்பவதி தாய்மாருக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படவுள்ளதாக மேற்படி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

இப்பொருட்கள் அடங்கிய பொதியானது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை கிளினிக்கிற்கு வருகின்ற 45 கர்ப்பவதித் தாய்மார்களுக்கே வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# முன்பள்ளி விளையாட்டுவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தூய தோமஸ் முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரபிதா இ.தேவசகாயம் பிள்ளை கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(அ-3-29)

# 14 வயது சிறுமி மீது துஷ்பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மிருசுவில் கெற்பேலிப் பகுதியில் 14 வயது சிறுமி பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

குறித்த சிறுமி தனது வீட்டிற்கு அண்மையில் உள்ள வயல்காணியில் உள்ள கிணற்றில் குடிநீர் எடுப்பதற்காக தனியாக சென்றுள்ளார்.


இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி குறித்த சிறுமியை அப்பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் வன்புணர்வுக்குட்படுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி யாழ். போதனா வைத்தியசாலையில் சிசிக்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-6)





யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியை திருமதி சிவமணி இரகுநாதனுக்கு சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விழா நாயகி மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் நிற்பதையும் இரகுநாதன் தம்பதியினரை மாணவன் ஒருவன் மாலையிட்டு கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# ஏழை மக்களின் காணிப்பிரச்சினை தீராமைக்கு கூட்டமைப்பே காரணம்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் வாழுகின்ற பெரும்பாலான ஏழை மக்களின் காணிப் பிரச்சினைகளை தீர்க்க முடியாது போனமைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் நடவடிக்கைகளே காரணம் என ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பெரிய பரந்தன் (டி5) கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மீள்குடியேறிய பின்பு மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருப்பினும் இன்னும் ஏராளமான பிரச்சினைகள் தீர்க்க வேண்டியுள்ளது. அதிலும் குறிப்பாக காணிப் பிரச்சினைகளே அதிகளவு காணப்படுகின்றது.

எப்போ ஒரு காலத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கர் கணக்கில் காணிகளை பெற்ற இந்த மண்ணின் வாசனையே தெரியாத பல தனியார்களுக்கு சொந்தமான காணிகளில் கடந்த கால வன்செயல்களால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் மிக நீண்ட காலமாக அதாவது முப்பது, நாற்பது வருடங்களுக்கு மேலாக வசித்து வருகின்றனர். இவர்களே அந்தக் காணிகளை நீண்ட காலமாக அபிவிருத்தி செய்தும் பராமரித்தும் வருகின்றனர்.

எனவேதான் இந்த மக்கள் நீண்ட காலமாக வசித்து வருகின்ற அந்த காணிகளை அவர்களுக்கே உரித்தாக்கும் வகையிலும் அரச காணிகளில் வசிப்பவர்களுக்கும் உரிய காணி தொடர்பான ஆவணங்கள் இல்லாதவர்களுக்கும் என அரசு ஒரு சட்ட மூலத்தை கொண்டு வந்தது.

அதனை மண்ணின் மகிமை எனும் பெயரில் நடைமுறைப்படுத்த அரசு மேற்கொண்ட முயற்சியினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நீதிமன்றத்தின் ஊடாக தடுத்துள்ளனர். இதனாலேயே பெரும்பாலான மக்களின் காணிப் பிரச்சினைகளை இன்னும் தீர்க்க முடியாதுள்ளது.

ஒரு சில பெரும் முதலாளிகளின் நலன்களை மாத்திரம் கவனத்தில் எடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மேற்கொண்ட முயற்சியினால் பாதிக்கப்பட்டது பெரும்பாலான அப்பாவி ஏழை மக்களே எனத் தெரிவித்தார்.

முன்பள்ளி மாணவர்களுக்கு தளபாடங்கள் வாங்குவதற்கு தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஐம்பதாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்வதாகவும் ஐ.ஓ.எம்.நிறுவனம் இந்த கிராமத்தில் பல அபிவிருத்தி வேலைகளை செய்வதற்கு நாற்பது மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. எனவும் குறிப்பிட்டார்.

இந்த மக்கள் சந்திப்பு நிகழ்வில் கிராம அலுவலர் வைத்தீஸ்வர மூர்த்தி, ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நடராசா, விவசாய திட்டக்குழு செயலாளர் விக்டர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)

# க.பொ.த.சாதாரண பெறுபேறுகள்

**கிளி/கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம்**

து.துஷாந் 7ஏபிஎஸ், க.தேவகுலன் 3ஏ 3பி 3சி, தி.தேவகி 2ஏ4பி2சி

**கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்**

குணரட்ணம் கதீஸ் 8ஏபி, நற்குணநாதன் மிதுஷா 6ஏ2பி, யோகேஸ்வரன் தர்சனன் 4ஏ3பிஎஸ், ரவிச்சந்திரன் விதுஜன் 2ஏ4பி2சிஎஸ்

**கிளி/பூநகரி மகா வித்தியாலயம்**

கோவிந்தராசன் போசகாந் 8ஏஎஸ்

**யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம்**

பரமேஸ்வரன் சுதர்சன் 6ஏ2சிஎஸ்.

# வெளிநாட்டு கடன் உயர்வு

(கொழும்பு)

இலங்கை பெற்றுள்ள வெளிநாட்டுக் கடன் இவ்வருடத்தின் முதல் இரு மாதங்களில் 136.3 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

# ஆசியாவின் திறமைமிகு தலைவர் ராஜபக்ஷ

## பொடி வைக்கிறார் அகாஷி

(கொழும்பு)

ஆசியாவின் திறமைமிக்க தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்று ஜப்பான் விசேட தூதுவர் யசூசி அகாஷி ஜப்பானில் நடைபெற்ற சந்திப்பில் தம்மிடம் தெரிவித்த பாராட்டுக் கருத்தை ஜனாதிபதியின் இந்து மத விவகார ஆலோசகர் பாபு சர்மாவும் முஸ்லிம் மத விவகார இணைப்பாளர் ஹஸன் மௌலானாவும் இணைந்து நேற்று முன்தினம் ஜனாதிபதியிடம் நேரடியாகத் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற ஜனாதிபதி செயலகத்தின் புதுவருட கொண்டாட்ட நிகழ்வொன்றில் ஜனாதிபதிக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்த பின்னர் இருவரும் இணைந்து இதனை ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

அதற்கு ஜனாதிபதி இவர்களுக்குத் தனது மகிழ்வுடன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். (அ-2)

# புதுவருடத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள்

(ஒட்டுசுட்டான்)

புதுவருடத்தை முன்னிட்டு ஒட்டுசுட்டான் பிரிவிற்குட்பட்ட 27 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய விளையாட்டுப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை சமணந்தூராவை பிள்ளையார் கோயில் முன்றலில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டம், துவிச்சக்கரவண்டி ஓட்டம், கிராமசேவையாளர் பிரிவுகளுக்கிடையிலான கயிறிழுத்தல் போட்டி உட்பட 20 இற்கு மேற்பட்ட விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இவ்வாறான போட்டியில் பங்கு பற்ற விரும் புவோர் கிராம சேவையாளர் அலுவலகங்க ளிலோ அல்லது பிரதேச செயலகத்திலோ நேரடியாக சென்று அவர்களின் ஆலோச னையை பெறுவதுடன் விண்ணப்பப்படிவங்களை பெற்று நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பூர்த்தி செய்ய முடியும் என கேட்கப் பட்டுள்ளது.

இந்நிகழ்வை ஒட்டுசுட்டான்பிரதேசசெயலகத்திற்குட்பட்ட அரசதிணைக்களங்கள், 64 ஆம்படைப் பிரிவு, பொலிஸ்துறை, கிராம மட்ட அமைப்புகள் ஆகியவற்றின் அனுசரணையுடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-258)

# விடுதலைப் புலிகளின் கொடூரங்களுக்கு பொறுப்பு கூற கூட்டமைப்பு தயாரா?

## சஜின்வாஸ் எம்.பி.கேள்வி

(கொழும்பு)

ஜெனீவாவில் தீர்மானம் கொண்டு வருவதன் மூலம் இலங்கை அரசை எவரும் அசைக்க முடியாது என்று இலங்கை ஜனாதிபதியிடம் வெளிவிவகார ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜின் வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஜெனீவா தீர்மானம் குறித்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய அவர்,

வெளிநாட்டு சக்திகள் தமது பிரச்சினையை தீர்க்கும் என்ற கற்பனையில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியே வரவேண்டும். போரின் இறுதியில் சரணடைந்தவர்களின் விபரங்கள் இல்லை என்று நாடாமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் குற்றம் சாட்டினார்.

ஆனால் கைது செய்யப்பட்ட சரணடைந்தவர்களின் விபரங்களை தீவிரவாத தடுப்புப் பிரிவு வைத்திருக்கின்றது. அந்தப் பட்டியலில் தமக்குத் தேவையானவர்கள் இல்லை என்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை ஏற்க மறுக்கின்றது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் அந்தப் பட்டியலில் இருக்க வேண்டும் என்று சுரேஸ் பிறேமச்சந்திரன் எதிர்பார்க்கின்றார்.

பொறுப்புக்கூறலுக்கு முகம் கொடுக்குமாறு இலங்கை அரசை அவர் கோருகிறார். அவ்வாறாயின் விடுதலைப் புலிகளால் இழைக்கப்பட்ட கொடூரங்களுக்குப் பொறுப்புக் கூறும் சமமான கடப்பாடு அவர்களுக்கும் உள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# தற்காலிகமாக இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீயணைப்பு வாகனத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளமையால் மறு அறிவித்தல் வரை அதனது சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ அறிவித்துள்ளார். (அ)

# முறிந்த நிலையில் ரெலிக்கொம் கம்பம்



(யாழ்ப்பாணம்)

விபத்துக் காரணமாக முறிந்த நிலையில் காணப்படும் ரெலிக் கொம் கம்பம் ஒன்று ஐந்து நாட்களுக்கு மேலாக மாற்றப்படாமல் காணப்படுகின்றது.

5 நாட்களுக்கு முன்னர் மானிப்பாய் வீதி பள்ளத்தடி சந்திக்கு அருகில் உள்ள ரெலிக்கொம் கம்பத்தோடு அரச போக்குவரத்து பேருந்து ஒன்று அண்மையில் மோதியதில் குறித்த கம்பம் முறிந்தது. அவற்றினூடாக செல்லும் தொலைபேசி இணைப்பு வயர்கள் தொங்கிய நிலையில் போக்குவரத்துக்கு இடையூறாகவும் கம்பம் முறிந்து வீழ்கின்ற ஆபத்தான நிலையிலும் காணப்படுகின்றது. விபத்து நடைபெற்று பல நாட்கள் சென்றும் இதுவரை குறித்த கம்பம் அகற்றப்படாமல் இருப்பது சம்பந்தப்பட்டவர்களின் கவனக்குறைவேயென மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். (அ-2-4)




# அம்புலி மாமா கதைகள்

## அபூர்வ இராகங்கள்



ஒரு காலத்தில், வியாபாரி ஒருவன் தன் பணியாட்களுடன் சொந்த ஊருக்குத் திரும்புகையில், ஒரு காட்டு வழியே வர நேர்ந்தது. இரவில் காட்டிலேயே கூடாரமடித்து தங்கிய அந்த வியாபாரி நிலவொளியில் மிக அழகாகத் திகழ்ந்த மலைகளையும், நிலாவொளி பட்டு ஒளி மயமாகத் திகழ்ந்த ஏரியையும் மிகவும் இரசித்தது அந்த இரவில் இனிய கானமிசைத்த பறவைகளின் இன்னிசையை! கேட்பவர்களை மெய்மறக்கச் செய்த அந்த இன்னிசை அவனை தேவலோகத்திற்கே அழைத்துச் சென்றது.

பறவைகளின் தீங்குரலைக் கேட்டவாறே உறக்கத்தில் ஆழ்ந்த அவனுக்கு பல இனிய கனவுகள் தோன்றின. காலையில் விழித்து எழுந்த அவன் தன்னுடைய அற்புதமான கனவுகளுக்குக் காரணமே தனக்குத் தாலாட்டுப் பாடிய அந்தப் பறவைகளின் தீங்குரல் தான் என்று உணர்ந்தான்.

உடனே எழுந்து இரவில் தான் கேட்ட இன்னிசை பாடிய அந்தப் பறவைகளின் இருப்பிடத்தை நோக்கி நடந்தான். அப்போதும் ஒன்றிரண்டு பறவைகள் கீதம் இசைத்தன. சிறிது நேரத்தில் அவை அனைத்தும் மரங்களை விட்டுப் பறந்து சென்று விட்டன.

அந்த வியாபாரியின் ஆட்களில் ஒருவன் பறவைகளைப் பிடிப்பதில் மிகவும் ஒரு கை தேர்ந்தவனாக இருந்தான். வியாபாரியின் உத்தரவின்படி அவன் ஒரு பறவைக்கூட்டில் பசையைத் தடவி வைத்தான். மாலை நேரத்தில் எல்லாப் பறவைகளும் தங்கள் கூடுகளுக்குத் திரும்பின. எந்த ஒரு கூட்டில் பசை தடவப் பட்டிருந்ததோ அந்தக் கூட்டுக்குரிய பறவை மட்டும் பாவம் பசையில் சிக்கிக் கொண்டது உடனே அந்த ஆள் மரமேறி அதைப் பிடித்து வியாபாரியிடம் தந்தான்.

பிடிபட்ட பறவை சிறகுகளை அடித்துக் கொண்டு தவிக்க வியாபாரி அதனிடம் கனிவாக உன்னைத் தங்கக் கூண்டில் வைத்து வளர்ப்பேன். தினமும் பாலும் பழமும் அளிப்பேன் பதிலுக்கு நீ கூட்டில் இருந்தபடியே ஒரு நாளைக்கு ஓரிருமுறை பாடினால் போதும் என்றான்.

என்னைக் கூண்டில் அடைக்காதே! நான் சுதந்திரமாகப் பறக்க விரும்புகிறேன். என்னை விட்டு விட்டால் நான் அடிக்கடி உன் வீட்டிற்கு வந்து பாட்டுப் பாடுவேன்! என்று அந்தப் பறவை கெஞ்சியது.

ஆனால் வியாபாரிக்கு அதை விட மனதில்லை. அதைத் தன்னுடன் எடுத்துக் கொண்டு வீடு திரும்பினான். தினமும் அதை ஒரு முறையாவது பாடும்படி வற்புறுத்த அதுவும் பாடியது. ஆனால் அது ஒரே சோக கீதமாக இருந்தது.

மிக அழகாகப் பாடும் பறவை ஒன்றை வியாபாரி கொண்டு வந்துள்ள செய்தி எங்கும் பரவ ஏராளமான மக்கள் திரண்டு வந்து அதைக் கண்டு மகிழ்ந்தனர். இவ்வாறு இரண்டு ஆண்டுகள் கழிந்தன.

வியாபாரிக்கு வெளியூர் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவன் பறவையிடம். நான் இல்லாத போதும் உன்னை என் வீட்டினர் நன்றாக கவனித்துக் கொள்வார்கள்.

உனக்கு ஒரு குறையும் இருக்காது. நான் காட்டு வழியே செல்லும் போது. உன் இருப்பிடத்திற்குச் சென்று உன் நண்பர்களிடம் உன்னைப் பற்றி கூற விரும்புகிறேன். அவர்களுக்கு ஏதாவது செய்தி சொல்ல வேண்டுமா? என்றான்.

நன்றி ஐயா! அவர்களிடம் நான் நன்றாக உண்டு, உறங்கிக் காலம் கழிக்கிறேன் என்று சொல்லுங்கள். ஆனால் என் சுதந்திரம் பறிபோய் விட்டது என்று சொல்லுங்கள். இந்த நிலையில் நான் என்ன செய்ய வேண்டும் என்று கேளுங்கள் என்றது அந்தப் பறவை. அதற்கு சம்மதித்த வியாபாரி காட்டின் வழியே சென்று பறவையின் நண்பர்களை சந்தித்துத் தகவல் கூறிவிட்டுச் சென்றான். பின்னர் வியாபார வேலைகள் முடிந்து ஊர் திரும்பியவன் நேராக கூண்டினுள் இருந்த பறவையிடம் நீ என்னிடம் சொன்னபடியே உன்னைப் பற்றிய செய்தியையும் நீ கேட்டதைப் பற்றியும் சொன்னேன்.

ஆனால், உன் நண்பர்கள் எதற்குப் பதிலே சொல்லவில்லை. எல்லாரும் மௌனமாக இருந்தனர். திடீரென ஒரு பறவை மரத்திலிருந்து கீழே விழுந்தது. அது இறந்து போய் விட்டது என்று அறிந்தேன். இந்த செய்தியை உன்னிடம் சொல்ல எனக்கு வருத்தமாக இருக்கிறது என்றான்.

கூண்டினுள் இருந்த பறவை நெடு நேரம் ஒன்றும் பேசாமல் கண்களை மூடியவாறு இருந்தது. திடீரென அது தலைக்குப்புற கவிழ்ந்து விழுந்தது. அடக்கடவுளே! என் பறவை இறந்து விட்டதே! என்று வியாபாரி அலறினான். ஐயோ! நான் கூறிய அதிர்ச்சிகரமான தகவலைக் கேட்டு துயரம் தாங்காமல் இறந்து விட்டது! என்று கேவினான். அவனுடைய குடும்பத்தினரும் இறந்து கிடந்த பறவையைப் பார்த்து கண்ணீர் வடித்தனர். இறந்து போன பறவையைப் புதைக்க முயற்சிக்கையில் திடீரென அது சிறகுகளை அடித்துக் கொண்டு பறந்த சென்று ஒரு மரத்தின் மீது உட்கார்ந்து கொண்டது.

எஜமானரே! என்னுடைய நண்பர்கள் எனக்கு அனுப்பிய செய்தியை என்னிடம் சொன்னதற்கு நன்றி! என்றது பறவை. என்ன? நீ இறக்கவில்லையா? அது இருக்கட்டும்! உன் நண்பர்கள் உனக்கு ஒன்றும் செய்தி அனுப்பவில்லையே! என்றார் வியாபாரி. அவர்கள் எனக்கு செய்தி அனுப்பி இருந்தார்கள்! ஆனால் அது உங்களுக்குப் புரியவில்லை.

என்னுடைய தகவலைக் கேட்டு ஒரு பறவை மரத்திலிருந்து கீழே விழுந்தது அல்லவா? அது உண்மையில் இறக்கவில்லை. இறந்தது போல் நடித்தது. என் சுதந்திரத்தை மீண்டும் எப்படிப் பெறுவது என்பதைத்தான் அந்தப் பறவை சூசகமாகக் காட்டியது நானும் அதைப் புரிந்து கொண்டு நடித்த என் சுதந்திரத்தைத் திரும்பப் பெற்று விட்டேன் என்றது.

தொடர்ந்து. என்னைக் கூண்டில் அடைக்காமலிருந்தால் அடிக்கடி நானே இங்கு வந்து பாட்டுப்பாடி இருப்பேன் உங்களை எவ்வளவோ கெஞ்சினேன். நீங்கள் கேட்கவில்லை அதற்குத் தண்டனையாக நான் இப்போது கடைசி முறையாக உங்கள் முன் பாடப் போகிறேன்! என்று சொல்லிவிட்டு அந்தப் பறவை அன்றுவரை பாடாத ஒரு அபூர்வ இராகத்தில் கல்லும் கரையுமாறு மிகமிக இனிமையாகப் பாடியது. எல்லாரும் மெய்மறந்து கேட்டனர். பாடி முடித்ததும் அது பறந்து விட்டது.

ஆனால், அந்த அபூர்வ இராகத்தை வியாபாரியால் மறக்கவே முடியவில்லை. அதை மீண்டும் மீண்டும் கேட்க விரும்பினான். இரவில் உறக்கம் வரவில்லை. அந்தப் பாட்டைக் கேட்காவிட்டால் பைத்தியம் பிடிக்கும் நிலை ஏற்பட அதுதான் தனக்கு விதிக்கப்பட்ட தண்டனை என்று அவன் புரிந்து கொண்டான்.



அந்தப் பாட்டை கேட்கவிரும்பி அந்தப் பறவையின் இருப்பிடத்தைத் தேடிப் போக எல்லாப் பறவைகளும் சேர்ந்துக் கூச்சலிட்டு அவனைத் தாக்க முயல அவன் வீடு திரும்பி விட்டான். ஆனால் அந்த அபூர்வமான பாட்டு சாகும்வரை அவனை ஏங்க வைத்தது.

# ஆணைக்குழு அறிக்கை பற்றி வடக்கு கிழக்கு மக்களுக்கு தெளிவில்லை

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

**உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் வடக்கு- கிழக்கு மக்களுக்கு போதியளவு தெளிவு கிடையாது என கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

**அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் ஆணைக்குழு அறிக்கை தயாரிக்கப்பட்டது.**

எனினும் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் அம்பாறை போன்ற பிரதேசங்களில் நடத்தப்பட்ட ஆய்வின்மூலம் இந்த விடயம் அம்பலமாகியுள்ளது. சாதாரண பொதுமக்கள் முதல் சிவில் செயற்பாட்டாளர்கள் வரையில் பலரிடம் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

இதில் பெரும்பான்மையானவர்கள் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு இறுதி அறிக்கை பற்றியும் அதன் பரிந்துரைகள் பற்றியும் போதியளவு தெளிவின்றி காணப்படுகின்றமை தெரியவந்துள்ளது.

ஆணைக்குழு அறிக்கையில் என்ன விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்பது பற்றி தமக்கு தெரியாது என அம்பாறையைச் சேர்ந்த பலர் தெரிவித்துள்ளனர். தமது பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்க எவரும் முன்வருவதில்லை என முஸ்லிம் மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஓரளவு ஆணைக்குழு அறிக்கை பற்றிய தெளிவு காணப்படுகின்றது.

ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் அரசாங்கம் முன்னுக்கு பின் முரணான கருத்துக்களை வெளியிட்டு வருவதாக யாழ்ப்பாண மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த மக்களும் ஆணைக்குழு அறிக்கை பற்றி கேள்விப்பட்டதாக தெரிவித்த போதிலும் அதன் உள்ளடக்கம் பற்றி அறியவில்லை.

(அ-2)

# தங்க நாணயம் திருட்டு

(புளியம்பொக்கணை)

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் உள்ள ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் தங்க நாணயங்கள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, மேற்குறித்த ஆலயத்தை உடைத்து அங்குள்ள மூலஸ்தானத்தில் உள்ள அம்மன் சிலையை உடைத்து அங்குள்ள தங்க நாணயங்கள் திருடப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பாக தர்மபுர பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-3-263)

# பணிப்பெண்களின் சம்பளத்தை உயர்த்துவது குறித்து பேச்சு

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு வேலைக்காக செல்லும் இலங்கை பணியாளர்களுக்கு சம் பளத்தை உயர்த்துவது தொடர்பாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பாக சவுதி அரேபியா மற்றும் குவைத் ஆகிய நாடுகளின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக பணியகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்கார கூறியுள்ளார்.

தற்போது குவைத்தில் பணியாற்றும் இலங்கை பணிப்பெண் ஒருவருக்கு மாதாந்த சம்பளமாக 60 தொடக்கம் 65 குவைத் டினார்கள் கிடைக்கின்றன. இதனை 85 குவைத் டினாராக உயர்த்துவதற்கு எண்ணியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக இறுதி இணக்கப்பாட்டினை எட்டும் வகையில் அடுத்த மாதம் மத்திய கிழக்கு நாடுகளின் தூதுவர்களுடன் ஜோர்தானில் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சம்பளத்தை அதிகரிக்கும்போது பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷிய வீட்டுப் பணிப்பெண்கள் பெற்றுக்கொள்ளும் சம்பளம் தொட ர்பாகவும் கவனம் செலுத்தப்படும் என பணி யகம் தெரிவித்துள்ளது.

(அ-2)

# இலங்கை- குவைத் புரிந்துணர்வு ஒப்பந்தம்

(கொழும்பு)

குவைத்தில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளரின் உரிமைகளைப் பாதுகாக்க புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கூறியுள்ளதாக சீன செய்தி சேவையான சிங்குவா தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார், பஹ்ரேன், ஜோர்தான் ஆகிய நாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கை ஏற்கனவே இந்நாடுகளுடன் புரிந்துணர்வு நடவடிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது.

2 இலட்சத்து 60 ஆயிரம் இலங்கையர்கள் குவைத்தில் பணிபுரிகிறார்கள். இவர்களில் 75 வீதத்தினர் பெண்களாவர். 2010 ஆம் ஆண்டில் மாத்திரம் தொழில் ஒப்பந்தங்கள் சம்பளம் வழங்கப்படாமை மற்றும் உடல் ரீதியான பாலியல் துன்புறுத்தல் சம்பந்தமான 14 ஆயிரத்து 704 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கூறுகிறது.

இலங்கையின் 50 சதவீத வெளிநாட்டு நாணய நிதி வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்கள் மூலம் பெறப்படுகிறது. இலங்கையின் வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கைத் தொழிலாளர்கள் 80 இலட்சம் பேரில் 25 சத வீதமானோர் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிகின்றனர். இவற்றுள் அதிகமானோர் பணிப் பெண்களும் பயிற்றப்படாத தொழிலாளர்களுமே ஆவர். (அ-2)



புதுவருட பிறப்பை முன்னிட்டு கிபுலாவெல பிரதேசத்திலுள்ள பட்டாசு தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.

# தமிழ் நாட்டிலிருந்து வருபவர்கள் மீதான கெடுபிடிகள் நிறுத்தப்பட்டது

## பிரபா கணேசன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சில வாரங்களாக இலங்கைக்கு வரும் பிரயாணிகளில் குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து வருபவர்களிடமிருந்து சுங்க இலாகாவின் ஆர்.டீ.எப் துறையினரால் ஏற்படுத்தப்பட்ட கெடுபிடிகள் நிறுத்தப்பட்டு விட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக இந்திய தமிழ் நாட்டிலிருந்து வரும் பிரயாணிகளிடமும் அதே போல் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு சென்று சிறு வர்த்தகம் புரியும் இலங்கை பிரயாணிகளிடமும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க இலாகாவினர் பாரபட்சமாக நடந்து வந்தனர்.

சிறு வர்த்தகம் செய்யும் தமிழர்கள் மீது மட்டும் குறி வைத்து நடத்தப்பட்ட செயற்பாடுகளினால் எமது அரசாங்கத்திற்கே அவப்பெயர் ஏற்படுகிறது.

இதனை சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளிடம் முறையிட்டதுடன் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரிடமும் இது சம்பந்தமாக முறையிட்டதை தொடர்ந்து நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க இலாகாவின் ஆர்.டீ.எப் துறையினரின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# இல்லத்தரசிகளின் ஜீவனோபாயத்தை அதிகரிக்க அமைச்சர் பசில் ஏற்பாடு

(கொழும்பு)

கைத்தறி நெசவாலைகளை மீண்டும் ஆரம்பித்து நவீன வகை ஆடைகளை உற்பத்தி செய்வதன் மூலம் நாட்டின் ஆயிரக் கணக்கான இல்லத்தரசிகளுக்கு ஜீவனோபாயத்தைப் பெற்றுக் கொடுப்பதில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நவீன வகையிலான கைத்தறி ஆடைகளை உற்பத்தி செய்வதன் மூலம் அவற்றுக்கு பெருமளவில் சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவரின் இலட்சியமாக இருக்கிறது.

இதனடிப்படையில் கம்பஹா மாவட்டத்தில் மீண்டும் கைத்தறி நெசவாலைகளை ஆரம்பிக்கும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தின் பல பிரதேசங்களில் தற்பொழுது சிறிய அளவில் கைத்தறி நெசவாலைகளை நடத்தி வருபவர்களை மூலமாக வைத்து கைத்தறி நெசவுத் தொழிலை மீண்டும் ஆரம்பிக்கும் வேலை திட்டங்களே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் பணிப்பின் பேரில் சட்டத்தரணி புஷ்பா ராஜபக்ஷ தலைமையில் இயங்கும் அமைப்பு ஒன்று இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 95


ஜேர்மனியர்களின் முகாம்களில் கொல்லப்பட்ட சோவியத் மக்களை நினைவுகூறும் தூபி

ஜேர்மனியர்களால் கிடங்குகளில் சுட்டுவீழ்தப்பட்டவர்களின் எச்சங்கள்


சித்திரவதைக் கூடங்களில் தயாரான மனிதத் தோலினாலான கையுறை

**மேற்குக் கரையோர உக்ரேனில் பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் முறியடிப்பு (1943 டிசெம்பர் 24-1944ஏப்ரல்17)**


இந்த போர்த்தந்திர தாக்குதல் நடவடிக்கை 1-வது, 2-வது, 3-வது, 4-வது உக்ரேனிய சேனைகள் மற்றும் 2-வது பைலோருஷ்ய சேனையின் துருப்புகளால் நடத்தப்பட்டது. பாசிச ஜேர்மனிய இராணுவத்தின் தென் பகுதியை முறியடிப்பது, மேற்குக் கரையோார உக்ரேனை விடுவிப்பது, பால்கனிலும் போலந்திலும் தாக்குதலைத் தொடுப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகளை ஏற்படுத்துவது ஆகியவைதான் இந்நடவடிக்கையின் இலட்சியமாக இருந்தன.

முதலில் எதிரியை பக்கவாட்டுப் பகுதிகளிலும் மையத்திலும் முறியடித்து, சோவியத் இராணுவத்தை நோக்கி நீட்டித்துக்கொண்டிருக்கும் முகப்புக்களை ஒழிப்பது, பின் மேற்குக் கரையோர உக்ரேனில் பாசிச ஜேர்மனியத் துருப்புக்களின் தற்காப்பு போர்முனை முழுவதையும் பலத்த தாக்குதல்களால் பிளந்து இவற்றை பகுதி பகுதிகளாக ஒழிப்பது என்று சோவியத் படைத் தலைமை திட்டமிட்டது.

மேற்குக் கரையோர உக்ரேனில் இயங்கிய எதிரி துருப்புக்களில் 18 இலட்சம் பேர் இருந்தனர். இவர்களிடம் 16800 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 2200 டாங்கிகள் மற்றும் திடீர்த்தாக்குதல் பீரங்கிகள், 1460 விமானங்கள் இருந்தன. சோவியத் தரப்பில், 22 இலட்சம் போர்வீரர்கள் இருந்தனர், 28 ஆயிரத்து 654 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 2015 டாங்கிகள், தானியங்கிப்பீரங்கி அமைப்புக்களும் 2600 போர் விமானங்களும் இவ்வாறாக சோவியத் துருப்புகள் ஆட்பலத்தில் 1.3 மடங்கும் பீரங்கிகளில் 1.7 மடங்கும் விமானங்களில் 1.8 மடங்கும் எதிரியை விஞ்சிநின்றன. டாங்கிகளில் மட்டுமே சோவியத் துருப்புகள் எதிரிக்குச் சிறிது விட்டுக் கொடுத்தன.

இந்தப் போர்த்தந்திர திசையில் சோவியத்துருப்புகளின் தயாரிப்புக்குப் பல சிறப்பம்சங்கள் இருந்தன. முதலாவதாக, இது மிகக்கடினமானதொரு சூழ்நிலையில்-சோவியத் படைபிரிவுகளும் யூனிட்டுக்களும் தினேப்பரில் தாம் கைப்பற்றிய தாக்கு முனைகளை விரிவுபடுத்துவதற்காக உக்கிரமாகப் போரிட்டுக்கொண்டிருந்தன, 1-வது உக்ரேனிய சேனையின் பிரதான சக்திகள் கீவ் திசையில் எதிரியின் பலத்த பதிலடியை தகர்த்துக் கொண்டிருந்தன- நிறைவேற்றப் பட்டது.

இரண்டாவதாக துருப்புகளின் ஆயத்தம் வசந்தகால ஆரம்பத்தில் சாலைகள் இல்லாத சேறும் சக்தியுமான சூழ்நிலைகளில் நடந்தது. பீரங்கிப்படைக்கு உதவுவதற்காக யூனிட்டுக்களிலும் படைப்பிரிவுகளிலும் துப்பாக்கி சுடும், கண்ணிவெடி அகற்றும் துணைப்பிரிவுகளைக் கொண்ட விசேட குழுக்கள் அமைக்கப்பட்டன. படைக் கிடங்குகளின் கிளைகள் மற்றும் டிவிசன்


ஜேர்மனியர்களினால் தூக்கிலிடப்பட்டசோவியத் மக்கள்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

கிடங்குகள் இயன்ற வரை துருப்புகளுக்கு அருகே கொண்டுவரப் பட்டன.

மூன்றாவதாக, துருப்புகளை இடம் மாற்றுதல், தீர்மானங்களை எடுத்து, வடிவமைத்து உரிய இடத்துக்குத் தெரியப்படுத்துதல், தொடங்கும் பிரதேசத்தில் முன்கூட்டியே பொறியியல் உபகரணங்களை அமைத்தல்


சோவியத்வீரர்களை நினைவுகூறும் சிற்பங்கள்

மற்றும் நிர்வாக மையங்களை துருப்புகளுக்கு அருகே கொண்டு வருதல் ஆகியவற்றிற்கு அவசியமான நேரத்தை குறைத்ததன் மூலம் இந் நடவடிக்கைகளுக்கான தயாரிப்புகள் குறைவான காலகட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

1943 கோடையிலிருந்து சேனைகள் கிட்டத்தட்ட இடையறாத கடும் சண்டைகளில் ஈடுபட்டதால் போர் வீரர்களை தார்மீக-மனநிலை ரீதியாகத் தயார்ப்படுத்துவது மீது பெரும் கவனம் செலுத்தப்பட்டது. மேலும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து இராணுவத்திற்கு பெருமளவில் வந்தவர்களுக்கு அரசியல்கல்வி மற்றும் பயிற்சி அளிப்பதன் மீதும் பெருங் கவனம் செலுத்தப்பட்டது.


மேற்குக் கரையோர உக்ரேனில் போர்த் தந்திர நடவடிக்கை இரண்டு கட்டங்களில் நிறைவேற்றப்பட்டது. முதல் கட்டமாகிய பனிக்காலக் கட்டத்தில், ஆரம்பத்தில் 1-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் ஷித்தாமிர் அருகே எதிர்த் தாக்குதலை நிறைவேற்றின. இதன் பயனாய் கர்சுன்- ஷிவ் சேன்க்கவ்ஸ்கி முகப்பில் ஹிட்லர் படைகளைச் சுற்றி வளைப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. பின் ஜனவரி 5 முதல் 16 வரை 2-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் கீரவகிராட் நடவடிக்கையை மேற்கொண்டு கீரவகிராட் நகரை விடுவித்தன.

ஜனவரி 24 முதல் பெப்ரவரி 17வரை 1-வது, 2-வது உக்ரேனிய சேனைகள் கர்சுன்-ஷிவ்சேன்க்கவ்ஸ்கி பிரதேசத்தில் எதிரியின் பெரும்படைத் திரட்டை சுற்றிவளைத்து ஒழித்துக் கட்டும் நடவடிக்கையை நிறைவேற்றின. இங்கே எதிரி 10 டிவிசன்களையும் 1 மோட்டார் பிரிகேடுகளையும் வைத்திருந்தான். இத்துருப்புகளுக்கு அருகே உமான் மற்றும் கீரவகிராட் பிரதேசங்களில் இன்னும் 8எதிரி டாங்கி டிவிசன்கள் இருந்தன.

ஹிட்லர் படைகளின் தற்காப்பை முனைப்போடு பிளந்து சோவியத் துருப்புகள் ஜனவரி 28 முடிவில் எதிரியின் 90 ஆயிரம் படைத் திரட்டைச் சுற்றிவளைத்தன. சுற்றி வளைக்கப்பட்ட படைத்திரட்டை எப்படியாவது முற்றுகையிலிருந்து விடுவிக்க ஹிட்லர் படைத்தலைமை முடிவு செய்தது. பெப்ரவரி ஆரம்பத்தில் முற்றுகையின் வெளி வளையத்தில் கடுமையான சண்டைகள் மூண்டன. பெப்ரவரி 12க்குள்ளாக சோவியத் டாங்கிப்படைகளும் காலாட் படைகளும் பாசிஷ்டுகளின் பெரும் டாங்கிப்படைகளின் பலத்த பதில டிகளை முறியடித்து, எதிரியின் டாங்கிப் படைத்திரட்டை அலைக் கழித்து, பலமிழக்கச் செய்து, ஆரம்ப நிலைக்குப் பின்வாங்கிச் செல்லுமாறும் தற்காப்பிற்குமாறு மாறும் கட்டாயப்படுத்தின.

முற்றுகையின் உள்வளையத்தில் சோவியத் துருப்புகள் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிரியின் சக்திகளைத் துண்டித்து, இவற்றை பகுதி பகுதிகளாக அழித்தன. பெப்ரவரி 14 ஆம்திகதி கர்சுன்- ஷிவ்சேன்க்கவ்ஸ்கி விடுவிக்கப்பட்டது. பெப்ரவரி 17-இல் சுற்றி வளைக்கப்பட்ட ஹிட்லர் படைத்திரட்டு முழுவதும் கிட்டத்தட்ட ஒழித்துக்கட்டப்பட்டது.

*மொத்தமாக கர்சுன்-ஷிவ்சேன்க்கவ்ஸ்கி கொதிகலத்தில் எதிரியின் தரப்பில் 55000 பேர் கொல்லப்பட்டனர். 18 ஆயிரத்துக்கும் அதிகமானோர் சிறை பிடிக்கப்பட்டனர். பெருமளவு ஆயுதங்களையும் வாகனங்களையும் எதிரி இழந்தான். இன்னும் 8 டாங்கி டிவிசன்கள் உட்பட 15 டாங்கி டிவிசன்களையும் சோவித் துருப்புகள் தோல்வியுறச் செய்தன. இது தினேப்பரில் நடந்த உண்மையான ஸ்டாலின்கிராட் சமராக இருந்தது.* தனது துருப்புகளின் போர்த்திறமை, இழப்பைப் பற்றிக் குறிப்பிட்ட 1- வது பாசிச ஜேர்மனிய டாங்கிப்படையின் படைத் தலைமை பின்வருமாறு செய்து அனுப்பியது, "ஜனவரி 28ஆம் திகதியிலிருந்து சுற்றிவளைக்கப்பட்ட இந்த துருப்புகள் அறிந்தோ அறியாமலோ


உக்கிரேன்போர்முனைபடைக்கிடங்குகள்

தம்முன் ஸ்டாலின்கிராடின் கதியைப் பார்த்தன என்பதை நினைவில் கொள்ள... வேண்டும். இப்படிப்பட்ட சோதனையை ஒரு சிலரால் மட்டுமே ஒரு தடவைக்கு மேல் தாங்க முடியும்" என்று அச்செய்தி இறுதியாகக் குறிப்பிட்டது.

(தொடரும்)

## நீதவான் நீதிமன்ற உத்தியோகத்தர் கைது

(கொழும்பு)

காலி பிரதம நீதவான் நீதிமன்றத்தின் வழக்குத் தடயப் பொருட்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவிக்கின்றார்.

நீதிமன்றத்தில் பொறுப்பிலுள்ள தங்க நகைகளுக்குப் பதிலாக போலி நகைகளை மாற்றிவைக்க முற்பட்டதாகக்கூறப்படும் சம்பவம் தொடர்பில் இந்தப் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் கூறினார்.

காலி நீதவான் நீதிமன்றத்தின் வழக்குத் தடயப் பொருட்களுக்குப் பொறுப்பான கண்காணிப்பு உத்தியோகத்தரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. (அ-2)

# செம்மொழியின் வரலாற்றை வெறித்தனத்தால் அழுக்கமுடியாது

## கண்டன அறிக்கையில் சீ.வி.கே. சிவஞானம்

(யாழ்ப்பாணம்)

செம்மொழிப் பெருமை கொண்ட தமிழினத்தின் இருப்பையும் வரலாற்றையும் இப்படியான வெறித்தனங்களால் மழுங்கடிக்கவோ, அழிக்கவோ முடியாது என மட்டக்களப்பில் நிறுவப்பட்டிருந்த பெரியார்களின் சிலைகள் உடைக்கப்பட்டது தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சீ.வி.கே. சிவஞானம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

மிக நீண்டகாலமாக மட்டக்களப்பில் நிறுவப்பட்டிருந்த அண்ணல் காந்தி, சாரணியத் தந்தை பேடன் பவல், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் மற்றும் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகிய பெரியோர்களது சிலைகள் ஒரே இரவில் ஒரே பாணியில் உடைத்து சேதமாக்கப்பட்டமையை மிக வன்மையாக நாம் கண்டிக்கின்றோம்.

தமிழ்த்தேசிய இனத்தின் தாயகமான வடக்கு- கிழக்கில் அந்த இனத்தின் வரலாற்று இருப்புக்களை அழித்து ஒழித்துவிடும் நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கமாகவே இனத்து ரோகிகளால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

தமிழர்களின் உரிமைப் போராட்டங்கள் யாவற்றையும் வன்முறை முத்திரை குத்தி விடுபவர்கள் அகிம்சையே தமது செயற்பாட்டு வடுவாக கொண்டிருந்த நான்கு உத்தமர்களின் சிலைகளையும் உடைத்தெறிந்ததன் மூலம் தாமே வன்முறையாளர்கள் என்பதை வெளிப்படையாகவே அடையாளங் காட்டியுள்ளனர்.

இதற்கு முன்னரும் இந்து மத ஞானி சுவாமி விவேகானந்தரின் சிலை உடைக்கப்பட்டதும் திருமலையில் தந்தை செல்வநாயகத்தின் சிலை உடைக்கப்பட்டதும் கிழக்கு மாகாணத்தில் எமது இருப்பை கேள்விக்குறியாக்கும் இதே நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் தான் என்பது இப்பொழுதும் சந்தேகமின்றி நிருபணமாகின்றது.

செம்மொழிப் பெருமை கொண்ட தமிழினத்தின் இருப்பையும் வரலாற்றையும் இப்படியான வெறித்தனங்களால் மழுங்கடிக்கவோ, மறைக்கவோ, அழிக்கவோ முடியாதென்பதை இந்த சமூக விரோதிகளும் தமிழின விரோதிகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

இவை எம் இனத்திற்கு புதியவை அல்ல. இவற்றை எல்லாம் தாண்டி நாம் எழுந்து நிமிர்ந்து நிற்போம். தமிழினமும் சிலைகளும் நிமிர்ந்து நிற்கும்என அவர் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-6)

# கோழி இறைச்சியின் விலை 94 ரூபாயினால் அதிகரிக்கும்?


பண்டிகைக் காலத்தில் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலையை 94 ரூபாயால் உயர்த்துவதற்கு கோழிப் பண்ணையாளர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை கோழிப்பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் டீ.பி. வனசிங்க தெரிவித்துள்ளார்.

தங்களின் கோரிக்கைக்கு அனுமதி கிடைக்கும் பட்சத்தில் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலை 444 ரூபாவாக அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இது குறித்து எவ்விதக் கோரிக்கையும் தமக்கு இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் கோரிக்கை முன்வைக்கப்படுமாயின் அது குறித்து கவனம் செலுத்தப்படுமெனவும் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்துள்ளார். (அ-2)

# பாலஸ்தீன ஜனாதிபதி இலங்கை வருவார்



பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அல் அப்பாஸ் எதிர்வரும் 15 ஆம் திகதி இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 60 ஆண்டுகால பாலஸ்தீன பிரச்சினை தற்பொழுது ஐக்கிய நாடுகள் அளவில் மேற்கொண்டு வரும் முன்னேற்றங்களைப் பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடுவார் என அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் சிரேஷ்ட புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ அண்மையில் பாலஸ்தீனத்திற்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டதன் மூலம் ஜனாதிபதியின் இரண்டாவது தலைமுறையினர் நல்லெண்ணத்தை உருவாக்க வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-2)

# கோப்பாய் கோட்ட மட்ட சித்திரப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சிறுவர் சித்திரப் போட்டி -2012 இற்கான போட்டி முடிவு களை கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வி. பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

*சிறுவர் சித்திரப்போட்டி*

தரம்-1

சி. கிஷாந்தன் (யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), ப.வைஷ்நாத் (யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி), ஜெ.ஜான்சி (யா/ நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை)

தரம்-2

சா. சிவானுஜா (யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி), இ. அங்கணன் (யா/ நடராஜ இராமலிங்க வித்தி), இ.நிருத்திகன் (யா/ புத்தகலட்டி விஸ்ணு வித்தி

தரம்-3

ஜெ.டா.எபினேசன் (யா/ கோப்பாய் நாவலர் வித்தி), செ. செந்துசா (யா/ புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை), ம.கஜீர்த்தனன் (யா/ நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை), சி.கவிப்பிரியன் (யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)

தரம்-4

மு.நிருஜன் ( யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), சு.யதுசா (யா/ இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை), த.சஜித்தா (யா/ கோப்பாய் நாவலர் வித்தி

தரம்-4

இ.சாயினி (யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), சி.ஏகதர்சன் ( யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), க.சிந்துசன் (யா/ சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை) (அ-2)

# மாலைதீவிற்கு உதவி வழங்கத் தயாராம்

(கொழும்பு)

உத்தியோகபூர்வ பயணத்தினை மேற்கொண்டு மாலைதீவு சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் உள்ளிட்ட குழுவினர் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் அப்துல் சமாட் அப்துல்லாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலைதீவின் வெளிநாட்டு அமைச்சில் இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது.

மாலைதீவிற்கு இலங்கை வழங்கும் ஒத்துழைப்புக்கள் மற்றும் இருநாட்டிற்கும் இடையிலான நெருங்கிய வரலாற்று உறவுகளை வலுப்படுத்தும் வழிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டன.

மாலைதீவிற்கு இலங்கை தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என்று பீரிஸ் உறுதி அளித்துள்ளார்.

மூன்று நாட்கள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் நேற்று முன்தினம் மாலைதீவை சென்றடைந்தார். (அ-2)







கிளிநொச்சி றோயல் முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களுடன் முன்பள்ளி ஆசிரியர்கள் நிற்பதையும் முன்பள்ளி சிறார்களின் இசையும் அசைவும் நிகழ்வினையும் விநோத உடை நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்:- வட்டக்கச்சி செய்தியாளர்)





நலிவுற்ற மாணவர்களின் மேம்பாட்டிற்கு உதவும் முகமாக யாழ் எயிட் நிறுவனத்தினால் யா/ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய மாணவர்களுக்கும் குட்டியபுலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கும் காலணிகள், கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களுடன் உதவியைப் பெற்ற மாணவர்கள் நிற்பதையும் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரிலிருந்து வருகைதந்த நித்திய ஒளி அறக்கொடை அமைப்பினைச் சேர்ந்த புஸ்பராஜா மாணவன் ஒருவனுக்கு காலணி வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# நிலத்துக்கடியில் சட்டவிரோத மதுபான தயாரிப்பு நிலையம்

(கொழும்பு)

பிலியந்தலை மடபாத்த பிரதேசத்தில் நிலத்துக்கடியிலான சட்டவிரோத மதுபான தயாரிப்பு நிலையமொன்றை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்துள்ளனர்.

விமானப் படையின் புலனாய்வுத் தகவல்களுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை நேற்று முன்தினம்இரவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் குறிப்பிடுகின்றனர். சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மடபாத்தை துடுவை பகுதியிலுள்ள வீடொன்றின் நிலத்துக்கு அடியிலான இரகசிய அறையொன்றில் இந்த சட்டவிரோத மதுபான தயாரிப்பு நிலையம் இயங்கி வந்துள்ளமை தெரியவந்துள்ளது. (அ-2)

# ஐக்கிய நாடுகள் அமைப்பு அந்நிய அமைப்பு அல்ல

## சவேந்திர சில்வா கருத்து



ஐக்கிய நாடுகள் அமைப்பு குறித்து கருத்து வெளியிடும் உரிமை எமக்கும் உள்ளது என அந்த அமைப்பிற்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு என்பது அந்நிய அமைப்பு அல்ல. சிலர் அதனை அந்நியமாக்க முயற்சிக்கின்றனர். ஐக்கிய நாடுகள் அமைப்பில் நாமும் உறுப்புரிமை வகிக்கின்றோம். எமது பக்க நிலைப்பாடுகளை வெளியிடக் கூடிய உரிமை உள்ளது என சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இலங்கையில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையினர் பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் ஏனைய அமைதி காக்கும் படையினரை விடவும் இலங்கைப் படையினர் சிறந்த முறையில் கடமையாற்றி வருகின்றனர். அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற போரில் வெற்றியீட்டினோம்.

ஆனால் வெளிநாடுகளின் வழிகாட்டல்களுக்கு அமைய போர் முன்னெடுக்கப்படவில்லை. உள்நாட்டில் எமக்கே உரிய முறையில் போர் வியூகங்கள் வகுக்கப்பட்டன என சவேந்திர சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# முல்லைத்தீவு கருநாட்டுக்கேணியில் பொது கட்டடங்கள் மீண்டும் இயங்குவதற்கான வாய்ப்பு

முல்லைத்தீவு கருநாட்டுக் கேணி பிரதேசத்தில் பாடசாலை உட்பட பொது கட்டடங்களை விரைவில் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மூன்று வருடங்களாக இந்த காணி பாதுகாப்புப் படையினர் வசமிருந்ததாகவும் அங்கிருந்த படைத்தரப்பினர் வேறொரு பகுதிக்கு நகர்ந்துள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் தகவல்கள் தெரிவிக்கின்றது.

இதனையடுத்து அந்த பகுதியில் ஏற்கனவே இருந்த பாடசாலை உட்பட பொதுக் கட்டடங்களை மீண்டும் இயக்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

பிரதேசத்தில் பொது நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை கருத்திற் கொண்டு புனரமைப்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறியவருகின்றது. (அ-2)




★ 1241-மங்கோலியப் படைகள் போலந்து மற்றும் ஜேர்மனியப் படைகளைத் தாக்கி தோற்கடித்தனர்.

★ 1413-ஐந்தாம் ஹென்றி இங்கிலாந்து மன்னனாக மூடிசூடினான்.

★ 1865-அமெரிக்க உள்நாட்டுப் போர்: றொபேர்ட் லீ தனது 26 ஆயிரத்து 765 பேருடனான படைகளுடன் வேர்ஜீனியாவில் சரணடைந்ததில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: நோர்வே மற்றும் டென்மார்க் மீது ஜேர்மனி தாக்குதலைத் தொடுத்தது.

★ 1947-டெக்சாஸ் ஒக்லகோமா மற்றும் கன்சாஸ் மாநிலங்களில் சூறாவளி தாக்கியதில் 181 பேர் உயிரிழந்தனர். 970 பேர் காயமடைந்தனர்.

★ 1948-ஜெருசலேம் நகரில் டெயிர் யாசின் என்ற கிராமத்தில் 120 அரபு மக்கள் இஸ்ரேலியரால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1953-வார்னர் பிரதர்ஸ் நிறுவனம் முதல் முப்பரிமாணத் திரைப்படமான ஹவுஸ் ஒவ் வக்ஸ் இனை வெளியிட்டது.

★ 1959-மேர்க்குரித் திட்டம் ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது விண்வெளி வீரர்கள் ஏழு பேரின் பெயர்களை நாசா அறிவித்தது.

★ 1967-முதல் போயிங் 737 பறப்பு.

★ 1984-யாழ்ப்பாணம் அடைக்கல மாதா கோயில் றொக்கெட் தாக்குதலுக்கு உள்ளானது.

★ 1991-ஜோர்ஜியா சோவியத் ஒன்றியத்திலிருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1992-முன்னாள் பனாமா ஜனாதிபதி மனுவேல் நொரியேகாவுக்கு ஐக்கிய அமெரிக்காவின் சமஷ்டி நீதிமன்றம் 30 ஆண்டுகால சிறைத்தண்டனை வழங்கியது.

★ 1999-நைஜர் ஜனாதிபதி இப்ராகிம் மைனசாரா படுகொலை செய்யப்பட்டார்.


★ 2003-ஈராக்கை அமெரிக்கக் கூட்டுப் படையினர் கைப்பற்றினர். சதாமின் 24 ஆண்டு கால ஆட்சி முடிவுக்கு வந்தது.

### பிறப்பு

★ 1968-ஜெய் சந்திரசேகர், அமெரிக்க நடிகர்

### இறப்பு

★ 1626-சேர் பிரான்சிஸ் பேகன், ஆங்கில தத்துவவாதி (பி.1561)



★ 1959- அமெரிக்கக் கட்டடக் கலைஞர் பிராஸ்க் லாய்டுரைட் நினைவு தினம் (பி.1867)

# ஈழத்தமிழர் அரசியல் கடக்கவேண்டிய தூரம் மின்னற் பொழுதில் இல்லை



உணர்ச்சி அரசியலும், முற்றிலும் பிறரைச் சார்ந்திருத்தாலும், மறுதலையில் விரக்தி அரசியல் பேசுதலும் என இந்த மூன்றும் தமிழர் அரசியலின்மீது படிந்துள்ள சாபம். தேர்தல் முறைமைக்குள் முழுக்க மூழ்கிய அண்ணாத்துரை அவர்கள் முன்னெடுத்த தமிழக திராவிட அரசியலும், அதே திராவிட தேசிய அரசியலின் பிரச்சார வடிவத்தை ஈழதேச அரசியலிலும் பல சந்தர்ப்பங்களிலும் காணலாம்.

திராவிட அரசியலுக்கும்சரி, ஈழ தேசிய அரசியலுக்கும் சரி பொருளாயதப் பார்வை என்பது இல்லை என்பது, திரு கா.சிவத்தம்பி போன்ற கோட்பாட்டார்களின் விமர்சனம். இங்கே முக்கியமானது, திராவிட அரசியலுக்கும் சரி, ஈழதேசிய அரசியலுக்கும்சரி சர்வதேசிய அரசியல் குறித்த நிதானமான பார்வைகள் பலசந்தர்ப்பங்களில் இருந்ததில்லை என்பது தான்.

தமிழக, ஈழ தமிழ்தேசிய அரசியல் ஏன் இவ்வாறு இருக்கிறது? தமெக்கென அது ஏன் சர்வதேசிய அரசியல் பகுப்பாய்வுகளைக் கொண்டிருக்கவில்லை? இந்தப்பார்வையைப் பெறவேண்டுமானால், தம்மை முன்னிறுத்திய, தாம் செயல்பட நேர்ந்த சமூகத்தின் ஜனநாய கமயமாக்கலை முன்நிறுத்திய சொந்த அரசியல் செயல்பாடுகள் இதற்குவேண்டும்.

**குளோபல் தமிழ் நியூஸ்**

இந்தியாவை முழுக்க நம்புவது, மறுதலையில் வெறுப்பது. அமெரிக்காவை முழுக்கநம்புவது, மறுதலையில் அமெரிக்காவினால் ஒன்றும் ஆகாது என நிராகரிப்பது எனும் நிலைப்பாடு ஏன் வருகிறது?

தன்னுடைய சமூகத்திலுள்ள தோழமை சக்திகளை இனம்கண்டு, தமது சமூகத்தை ஜனநாயகப்படுத்த முடியாமல் இருப்பதற்கான இடர்களை இனம்கண்டு, ஒரு கூட்டு மனநிலைகொண்ட அரசியல் தலைமையை தமிழ்தேசிய அரசியல் ஒருபோதும் அவாவிநிற்கவில்லை. ஆயுத மேந்திய அரசியலின்போதும் இப்போதுஅதற்குப்பின்னான காலத்திலும் தமிழர்களின் தலைமையினது பண்பு என்பது குறுங்குழுத்தமையையும் அதிகாரத்தை ஒருசில நபர்களிடம் குவித்துக்கொள்கிற ஜனநாயகமற்ற தன்மையயும்தான் கொண்டிருந்துவருகிறது.

ஜனநாயகமயப்படுத்தல் என்பது ஒரு சமூகத்தின் மக்கள் திரளுடன் உயிரூக்கமுள்ள உறவைப் பேணுவதால் உருவாவது. வர்க்கம், சாதியம், பெண் ஒடுக்குமுறை இதுவன்றி, இலங்கும் படிநிலை ஒடுக்குமுறைகளை இனம்கண்டு உரையாடலின் வழி அதனைக்களைவதனால் உருவாவதுதான் ஜனநாயகமயப் படுத்துதல் எனும் செயற்போக்கு.

ஆயுதமுனையில் தேர்ச்சி பெற்றவர்கள், சட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களின் மேதமைகளை, வெகுமக்கள், கீழ்நிலையிலிருந்து ஏற்றுக் கொள்ளவேண்டும் எனும் மெல் தட்டு மனோநிலைலதான் தமிழ் தேசிய அரசியலின் பண்பாக இருந்து வந்திருக்கிறது.

இவர்களது அரசுகள் உள்நாட்டு அதிகாரிகள், தூதரக அதிகாரிகள், வெளிநாட்டு அரசுத்தலைவர்கள் இவர்களோடு பேசுவதன்மூலம்மட்டுமே பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என மேடையில் நின்று கீழிருக்கும் மக்களுக்குச் சொல்கிறார்கள். ஆட்சியாளர்களுக்கு மக்கள் திரளினால் உருவாக்கப்படும் நெருக்கடிகளை இவர்கள் ஒரு போதும்கவனம் கொள்வதில்லை. அரசியல் என்பதனை அலுவலக நிர்வாகமென்பதுபோல அறுதியில் இவர்கள் குறுக்கிவிடுகிறர்கள்.

இந்த மனநிலையில் இருந்துதான் இவர்கள் முழுமையாக இந்தியாவை, அமெரிக்காவை நம்புவது, அல்லவெனில் வெறுப்பது எனும் நிலைப் பாட்டுக்கு வருகிறார்கள்.

அரசியல் சமவேளையில் இரு முகம் கொண்டது. தமது சொந்த நிலத் தின் மக்கள் திரளுடனான உயிரூக்கமுள்ள தொடர்பிலும் பகிர்விலும் உருவாவது. அதே வேளை வெளிச் சக்திகள் குறித்த பகுப்பாயுவுடனான நகர்வுகளிலும் உருவாகி வருவது. இன்றைய தமிழ்த் தேசிய அரசியலில் அரசியல் தீர்வும் மனித உரிமைகட்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பான வலியுறுத்தலும் ஒன்றோடொன்று தொர்பு கொண்டது. இந்த இரண்டினது தொடர்பாகவும் ஒரு அரசியல் தலைமை வெகுமக்களுடன் ஊடாட்டம் கொண்டிருக்க வேண்டும். நடந்தது என்ன என்பதனைப் பொதுமக்களைச் சந்தித்து விளக்கவேண்டும். சாத்தியம் சாத்தியமின்மைகளை குறித்து அவர்களுக்கு விளக்கப்படவேண்டும்.



யதார்த்த அரசியல் குறித்த அறிதல் என்பது வெகுமக்களிடம் உருவாக்கப்பட வேண்டும்.

தலைமையை நம்புங்கள், தலைவர்களை நம்புங்கள். இதனது தொடர்ச்சியாக இப்பொழுது இந்தியாவை நம்புங்கள் அல்லது அமெரிக்காவை நம்புங்கள் என அதித நம்பிக்கைகளை உருவாக்குதல் அரசியல் உணர்வை அல்ல, மாறாக பக்தி மார்க்கத்தையே உருவாக்கும். ஐம்பது ஆண்டுகால தமிழ் தேசிய அரசியல் என்பது ஈழத்தமிழர்களை அரசியல் பிரக்ஞை பெற்ற வெகுமக்கள் திரளாக உருவாக்கவில்லை. மாறாக நம்பிக்கை வைக்கும், தவறினால் விரக்தியில் வீழும் தன்மைகளையே உருவாக்கி இருக்கிறது.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் நன்றி தெரிவித்து போஸ்டர் ஒட்டும், ஊர்வலம்போகும் மனிதர்களுக்கும், இதனை விமர்சிக்கும்போக்கில் இந்தியாவினால்,அமெரிக்காவினால் ஏதும் ஆகாது என இன்னொரு தீவிர எல்லையைச் சொல்லும் மனிதருக்கும் குணரீதியில் எந்த வித்தியாசமும் இல்லை. இரண்டுமே சர்வதேசிய அரசியல் குறித்து நிதானமற்ற பார்வையிலிருந்து வருவதாகும்.

அரசியலை வெறுமனே ஊடகம் மூலமே அறிந்து, ஊடகம் மூலமே வாழ்ந்து, ஊடகம் மூலமே கடந்து போகும் மனநிலையிலிருந்து வருவதாகும். வெகுமக்களுடன் எந்தப் பகிர்தலும் ஊடாட்டமும் அற்ற தமிழ் அரசியலின் தன்மையே இத்தகைய மனநிலையின் ஊற்றுக் கண்.

சர்வதேசிய அரசியலை நாம் எப்படி மதிப்பிடலாம்? சாத்தியமே இல்லை என நினைத்த இந்தியாவின் அரசியல் மாற்றம் எவ்வாறு நேர்ந்தது? இந்த மாற்றம், தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்திய அரசுடன் பேசியதால் நேர்ந்தது இல்லை. கருணாநிதி, ஜெயலலிதா பெரிய மனது வைத்ததால் நேர்ந்தது இல்லை. தமிழக மக்கள் பெருமளவில் இப்பிரச்சினையை வைத்து மன்மோகனுக்கு, கருணாநிதி, ஜெயலலிதாவுக்கு அரசியல் அதிகாரம் இல்லாது செய்வார்கள் என்பதனை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்களது வாழ்வுக்கு அதிகாரம் இல்லாது அர்த்தம் இல்லை. இதுதான் நேர்ந்த மாற்றத்துக்கான அடிப்படை.

வெகுமக்கள் திரளுக்குள் இந்த மாற்றம் உருவாவதற்கு அங்கு இடைவிடாத இயக்கத்தினை பல வேறு இயக்கத்தினர் மேற்கொண்டனர். மக்கள் திரளால் நேரந்த மாற்றமே அல்லாது இது வெள்ளைக் கொலர் அரசியல்வாதிகளினால் உருவான மாற்றம் இல்லை.

இந்தியாவில் நேரந்த மாற்றம் இத்தகையது என்றால், அமெரிக்கா இந்த நிலைப்பாடு எடுக்க காரணம் என்ன? அமெரிக்கா தனது புவியியல், பொருளியல் நலன்களுக்காக உலகின் பொருண்மையான நெருக்கடிகளை உபயோகித்துத் தனது பொறியமைப்பை விரிக்கும்.

இலங்கையைப் பொறுத்து பொருண்மையான காரணங்கள் என்ன? இலங்கை அரசின் போர்க் குற்றங்களுக்கான, மனித உரிமை மீறல்களுக்கான துல்லியமான சாட்சியங்கள் இருக்கிறது. சனல் நான்கு ஆவணப்படம் மிகப் பெரும் ஆதாரம். மேற்கத்திய நாடுகளில் வாழும் தமிழர்களின் திரட்சி, இந்தத் திரட்சி அந்தந்த நாட்டின் தேர்தலில் அரசியலில் முக்கியமான சக்தியாக இருக்கிறது. இதனை அதிகாரம் வேண்டும் அரசியல் வாதி புறந்தள்ள முடியாது. தமிழர்தலைமைகளை தனது நோக்கின் பொருட்டு அமெரிக்கா அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தும். இதுதான் அந்தப் பொருண்மைப் பண்புகள்.

இலங்கையின் மீது அமெரிக்கா முன்னின்று கொணர்ந்த தீர்மானத்தை இஸ்ரேல், கியூபா மீதான தீர்மானம் போல் ஒப்பிடமுடியாது. அமெரிக்காவும் ஐரோப்பாவும் தமது அதிகாரத்தின் பொருட்டு செயற்படும் சக்திகள். அவை பொருளாதாரத் தடைகள் கொணரும். இராணுவத் தலையீடுகள் செய்யும். *அமெரிக்காவை எதிர்க்கும் ரஸ்யா, சீனா போன்றவை வெறும் பொருளாதார இலர்பம் மட்டுமே நோக்கம் கொண்டவை.* இவைகள் அமெரிக்க ஆதரவு நாடுகள் மீது, குறிப்பாக இஸ்ரேல் மீது பொருளாதாரத் தடைகளோ அல்லது இராணுவ தலையீடுகளோ செய்யாது. வெறும் வாய்வீச்சும் பொருளாதார நலன் களும் தான் இந்த நாடுகளது அரசியல்.

இலங்கை மீதானது, மென்மையான தீர்மானம் எனச் சொல்லப்படுகிறது. இந்தத் தீர்மானம் ஏன் மென்மையாக ஆனது என்பதற்குக் காரணம் இந்தத் தீர்மானத்தின் மீதான இந்தியாவின் தாக்கத்தில் உள்ளது.

மென்மையான தீர்மானம் என்பதால் இதனது எதிர்கால முக்கியத்துவம் குறைகிறதா? நிச்சியமாக இல்லை. கடாபியை முதலில் மென்மையான அணுகுமுறையால்தான் மேற்குலகும் அமரிக்காவும் அணைத்தது. சலுகைகளை அள்ளி வழங்கியது. திட்டங்கள் போட்டது. ஹிலாரி உட்பட ஜான்மேஜர் போன்ற தலைவர்கள் லிபியா போய் கடாபியை கட்டித்தழுவினார்கள். கடாபிக்கும் மேற்குக்குமான கசப்பு, தேனிலவில் தான் துவங்கியது.

இலங்கையைப் பொறுத்தும் பயங்கரவாத எதிர்ப்புத் தேனிலவில்தான், அதனது அங்கமாகத்தான் இந்த மென்மையான தீர்மானம்வரை வந்திருக்கிறது.

இலங்கை மீதான நடவடிக்கையை அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் இப்படித்தான் துவங்க முடியும். இது நெடிய செயற்போக்கு. தமிழ் தேசிய அரசியலின் வயது அறுவது ஆண்டுகள்.

இலங்கை இனவாத அரசியலின் வயதும் இதுதான். இன்று ஈழத் தமிழர்கள் கடக்கவேண்டிய தூரத்தை மின்னற்பொழுதில் கடக்கமுடியாது.

# தமிழுக்கு சேவை செய்தாலும் சிலைகளாக மாறிவிடாதீர்கள்

## சிலை உடைப்புக்குறித்து யோகராஜன் எம்.பி.

(கொழும்பு)

மட்டக்களப்பில் மகாத்மாகாந்தி, பேடன் பவல், விபுலாந்த அடிகள், புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை ஆகியோரின் சிலைகள் உடைக்கப்பட்டமை சர்வதேச ரீதியில் இலங்கையின் கௌரவத்தைப் பாதிக்கும் செயலாகும் என நுவரெலியா மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

தமிழரல்லாத காந்தியையும் பேடன் பவலையும் எதிரிகளாகவும் தமிழர்களின் ஆதரவாளர்களாகவும் கருதி செய்யப்பட்ட பேரினவாதிகளின் செயற்பாடே இச்சிலை உடைப்பாகும். உடைக்கப்பட்ட் சிலைகளை மீண்டும் உருவாக்குவதற்கு இலங்கையர்களிடமிருந்தும் சர்வதேச சமூகங்களிடமிருந்தும் உதவிகள் கிடைக்க வேண்டும்.

குஜராத்தில் பிறந்த இந்தியரான மகாத்மா காந்தியை உலகமே நேசிக்கின்றது. வெள்ளையரான பேடன் பவலின் சாரணியம் சகல இன மக்களையும் ஐக்கியப்படுத்துகின்றது. இவர்கள் சிறந்த குணங்களைத் தன்னகத்தே கொண்ட உத்தமர்கள்.

சுவாமி விபுலானந்தரும் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளையும் நமது மண்ணின் மைந்தர்களாக சைவத்திற்கும் தமிழுக்கும் உயிர் மூச்சாய்த் திகழ்ந்தவர்கள்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் எதிர்ப்பைக் காட்டுவதற்காக நடத்தப்பட்ட சிலை உடைப்பின் மூலம் இனவாதிகள் சாதிக்க நினைப்பது என்ன? விபுலானந்த அடிகளாரும் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளையும் தமிழ் வளர்த்தது குற்றமா?அல்லது தமிழனாகப் பிறந்து சமூக நலனுக்காக உழைத்தது தவறா?

மனிதநேயம், நற்பண்புகள், பழக்கவழக்கம், நெறிமுறை, நீதிக்குத் தலைவணங்குவது, பிறசமூகங்களைப் புரிந்து கௌரவிப்பது, சமயங்களை மதிப்பது போன்ற அடிப்படை அறிவில்லாதவர்களின் செயலே இதுவாகும்.

படைகள் குவிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் சிலைகளுக்கே பாதுகாப்பு இல்லை என்றால் தமிழ் உயிர்களுக்கு என்ன உத்தரவாதம்? தமிழ் சமூகத்தின் எதிர்காலம் சூனியமாகவேயுள்ளது என்பதற்கு இது சான்றாகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுக்களில் பரிந்துரைகளுக்கும் என்ன நடக்கப் போகின்றது என்பதற்கும் இது ஓர் உதாரணமாகும் என இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-2)

## காலாவதியான அரிசி மூடைகள் மீட்பு

(கொழும்பு)

மனித பாவனைக்கு உதவாத காலாவதியான 152 அரிசி மூடைகளை புறக்கோட்டையில் இருந்து நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவை மீட்கப்பட்டதாக அதிகார சபையின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ஐந்தாம் குறுக்கு தெருவில் உள்ள கடையொன்றில் இருந்தே இந்த அரிசி மூடைகள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் அந்த கடையில் இருந்து திகதி மாற்றம் செய்யப்பட்ட பொதிகளும் மீட்கப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார். (அ-2)

# போலிக்காரணங்களுடன் அரசியல் தஞ்சம் கோரியவர்களின் பெயர்கள் வெளிவரும்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளவர்கள் பற்றிய தகவல்கள் வெளியிடப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

போர் இடம்பெற்ற காலத்தில் போலியான தகவல்களையும் ஆவணங்களையும் தூதரகங்களுக்கு சமர்ப்பித்து இவ்வாறு தஞ்சம் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகன விபத்தில் உயிரிழந்த நபர்கள் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்ததாகத் தெரிவித்து போலி ஆவணங்கள் தயாரித்து சிலர் குடும்பத்துடன் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு குற்றம் சுமத்தியுள்ளது.

இவ்வாறு போலி ஆவணங்களைப் பயன்படுத்தி அரசியல் தஞ்சம் கோரியவர்கள் பற்றிய தகவல்கள் ஏற்கனவே திரட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. போலி ஆவணங்களைப் பயன்படுத்தி அரசியல் தஞ்சம் கோரியோர் பற்றிய தகவல்கள் விரைவில் குறித்த நாடுகளின் தூதரகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்துள்ளது.

போலியான தகவல்களை வழங்கி இவ்வாறு அடைக்கலம் கோருவதனால் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

# மாலைதீவு மீன் தொழிற்சாலை களுத்துறையில் அமைக்க முடிவு

(கொழும்பு)

மாலைதீவு மீன் தொழிற்சாலையொன்று இவ்வருட இறுதிக்குள் களுத்துறையில் அமைக்கப்படவுள்ளது.

ஜப்பானிலுள்ள மாலைதீவு மீன் உற்பத்தியாளர் ஒருவர் தொழிற்சாலையொன்றை இலங்கையில் அமைப்பதற்கு நிதியுதவி வழங்குகிறார். இதற்கான ஒப்பந்தமொன்று விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதாக கடற்றொழில் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

வருடமொன்றுக்கு இலங்கை 6 ஆயிரம் தொடக்கம் 8 ஆயிரம் தொன் மாலைதீவு மீனை இறக்குமதி செய்கிறது. ஒரு கிலோ மாலைதீவு மீனின் விலை 20 ஆயிரம் ரூபா ஆகும். எனவே இங்கு மீன் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பாவனையாளர்கள் ஆயிரம் ரூபாவிற்கு மீனைக் கொள்வனவு செய்ய முடியும்.

மீனை ஏற்றுமதி செய்வதன்மூலம் இலங்கை 21 மில்லியன் ரூபாவை பெற முடியும் எனவும் மாலைதீவு மீனையும் இதர மீன் வகைகளையும் இறக்குமதி செய்ய 14 மில்லியன் ரூபாவே செலவாகுமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் 400 மில்லியன் வெளிநாட்டு செலாவணியாக பெற முடியுமெனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

(அ-2)

# வடபகுதியில் ஜூலை மாதத்திற்கு முன்னர் கண்ணிவெடி அகற்றப்படும்

## அமைச்சர் குணரத்ன வீரக்கோன்

(கொழும்பு)

வடபகுதி நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகளை ஜூலை மாதத்திற்குள் நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளதாக மீள் குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

நிலக்கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை நிறைவுபெற்று இரண்டு மாதங்களுக்குள் மீள் குடியேற்றப் பணிகளை ஆரம்பிக்க எண்ணியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தால் இடம் பெயர்ந்த மக்கள் வவுனியா செட்டிக்குளம் கதிர்காமர் மற்றும் ஆனந்தகுமாரசுவாமி நிவாரணக் கிராமங்களில் தொடர்ந்தும் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த கிராமங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் மொத்தமாக ஆயிரத்து 623 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்து 469 பேர் அடங்குகின்றனர்.

கடும் காற்று, மழை ஆகியவற்றினால் நிவாரணக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அவ்வப்போது பாதிக்கப்படுகின்ற நிலையில் மீள்குடியேற்றப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவு பெற்றதும் அந்தப் பகுதிகளில் வீடமைப்பு திட்டங்கள் செயற்படுத்தப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# முதலைகளினால் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைக்க நடவடிக்கை

## வன பரிபாலன திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

மாத்தறை நில்வள கங்கையில் முதலைகளினால் மனிதர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை குறைக்கும் நடவடிக்கைகளில் வன பரிபாலன திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நில்வள கங்கையினை அயல் கிராம சேவகர்களுடன் திணைக்கள விசேட பிரிவினர் தொடர்பினை ஏற்படுத்தி முதலைகள் மனிதர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் திட்டமிடப்பட்டுள்ளதாக திணைக்கள இயக்குநர் எச்.டி ரத்நாயன தெரிவித்துள்ளார்.

இந்த நில்வள கங்கையில் மனிதர்களை தாக்கும் முதலைகள் நூற்றுக்கணக்கில் இருப்பது குறித்து ஆராயப்படுகின்றது.

இந்த முத லைகள் வாழும் பிரதேசங்கள் இனங்காணப்பட்டு உரிய எச்சரிக்கை கிராம வாசிகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ-2)


## நெஞ்சம் பரிதவிக்கும் கண்ணீர் காணிக்கை

மண்ணகம் மகிழ 07 04 1975



விண்ணகம் நெகிழ 10 03 2012

அமரர் **திருமதி குகநாதன் புனிதவதி**

(ஆசிரியர், கிளி /செல்லியாதீவு அ.த.க. பாடசாலை)

ஆசிரியத்துவத்தை மாணவர்க்கினிதே ஆற்றி
கற்பகதரு உருவாய் நீயிருந்து
செல்லியாதீவுதனில் நற்பண்பு வளர்த்து
அனைவரது வாழ்விலும் அன்பொளி ஏற்றினாய்
மாசற்ற சேவையை மண்ணுக்காற்றி தேசம் தழைத்திட
நல்மாணக்கரை உருவாக்கினீரே!


இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உற்றார்,உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கிளி/செல்லியாதீவு,
செல்விபுரம்,
பூநகரி. (8130)

உமது பிரிவால் துயருறும்
அதிபர், ஆசியர்கள்,மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

# அதிசய உலகம்...


## உலகிலேயே மிக நீளமான பெரிஸ்கோப்பு -இந்தியாவில்



தமிழ் நாட்டின் கால்பாக்கத்திலுள்ள இந்திரா காந்தி அனு ஆராய்ச்சி நிலையத்தில் உலகின் மிக நீளமான அதாவது 10 மீற்றர் நீளம் கொண்ட பெரிஸ்கோப்பு ஒன்று ரூபாய் 4 கோடி மதிப்பில் இங்கு உருவாக்கப்பட்டுள்ளது.


இந்த ஆய்வு மையத்தில் அதிக எண்ணிக்கையில் ரியாக்டர்கள் இயங்கி வருகின்றன. இந்த ரியாக்டர்களின் பராமரிப்புப்பணிகளை பார்வையிட ரிமோட் கன்ரோல் மூலமாக இயங்கும் இந்த பெரிஸ்கோப்புகள் பயன்படும் என தெரிய வருகிறது. அனுவை பிளந்து வெப்பத்தை உருவாக்கி நீராவியை தயார் செய்யும் அனைத்து பணிகளையும் செய்பவை தான் இந்த ரியாக்டர்கள். இந்த ரியாக்டர்களின் பராமரிப்பு பணியை கண்களால் நேரடியாக பார்வையிட முடியாது. இதனை சாத்தியமாக்கவே இந்த பெரிஸ்கோப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## செவ்வாய்க் கிரகத்தில் கண்ணீர் துளிவடிவில் தீவுகள்



அமெரிக்க நாட்டின் டெக்சாஸ் பல்கலைக் கழக புவியியலாளர் லோனா மஸ்கர் டெல்லி என்பவர் மேற்கொண்ட ஆய்வில் செவ்வாய் கிரகத்தில் காணப்படும் துளி வடிவம் கொண்ட தீவுகள் அங்கே ஆழமான பகுதியில் நீர் இருந்ததற்கான ஆதாரத்தை தெரிவிப்பதாக தகவலளித்துள்ளார். கடந்த 2001 ஆம் ஆண்டில் செவ்வாயில் ஆய்வு மேற்கொள்ள சென்ற ஓடிசி விண்கலம் அனுப்பிய புகைப்படங்களில் கால்வாய்கள் மற்றும் பள்ளத்தாக்குகள் போன்றவை காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இத்தீவுகளின் நீளம் 3 முதல் 30 மைல்கள் தொலைவு இருக்கக் கூடும் என்றும் சுமார் 1.5 முதல் 150 சதுர மைல்கள் பரப்பளவை கொண்டிருக்கும் என்றும் கூறப்படுகிறது. செவ்வாய்க் கிரகத்தில் பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு நீர் தோன்றியிருக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

## தண்ணீரை வெளியிடும் நட்சத்திரம் கண்டுபிடிப்பு



இயந்திர துப்பாக்கியிலிருந்து வெளியேறும் குண்டுகளின் வேகத்தைப்போல் 80 மடங்கு வேகத்தில் நீரை சிதற அடிக்கும் நட்சத்திரம் ஒன்றை நெதர்லாந்திலுள்ள லெய்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இன்ஃப்ராரெட் கதிர்களை பயன்படுத்தி கண்டுபிடித்துள்ளனர். பூமியிலிருந்து சுமார் 750 ஒளி ஆண்டுகள் தூரத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள இந்த நட்சத்திரத்திரத்தின் வயது 1 இலட்சம் ஆண்டுகள் என கணக்கிடப்பட்டுள்ளது. அதனை ஒருவிதமான வாயு மண்டலம் சூழ்ந்துள்ளது. இந்த வாயுக்கள் ஹைட்ரஜன் மற்றும் ஒட்சிசன் அணுக்கள் என தெரியவந்துள்ளது. இந்த ஒட்சிசனும் ஐதரசனும் ஆயிரக்கணக்கான டிகிரிசெல்சியஸ் வெப்பநிலையில் தண்ணீராக மாறுவதாக மேலும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் நட்சத்திரத்தின் துருவங்கள் வழியே வெளியேறும் போது ஒரு இலட்சம் டிகரி செல்சியஸ் வெப்பத்தை எட்டி வாயு நிலையை அடைகிறது. சுற்றியுள்ள வாயு மண்டலத்தில் மோதி-விரைவில் குளிர்ந்து மீண்டும் திரவ நிலையை அடைகின்றதாம்.


## உலகிலேயே அதிகமான எடையுடைய வெங்காயம்



உலகிலேயே மிகவும் நிறை கூடிய வெங்காயத்தினைக் கொண்ட நாடு என்ற பெருமையை பிரித்தானியா பெறுகின்றது. Nottinghamshire.Newarkஐச் சேர்ந்த ஓய்வு பெற்ற அரச அதிகாரியானGlazebrook17 Ib 15.5oz நிறையுடைய வெங்காயத்தினை வளர்த்து John Sifford இன் சாதனையை முறியடித்து COVETED விருதை வென்றுள்ளார்.

Harrogate மலர் கண்காட்சியிலேயே இந்த சாதனை முறியடிக்கப்பட்டது.முன்னாள் பட்டைய அளவையியலாளரான 67 வயதுடைய Glazebrook, தாம் இந்த விருதை தட்டிச் செல்வதில் பெருமகிழ்ச்சியடைவதாக தெரிவித் துள்ளார். இவர் ஏற்கனவே மூன்று உலக சாதனைகளுக்கு சொந்த மானவராவார். அதிக நிறையுடைய உருளைக்கிழங்கு Parsnip மற்றும் மிகவும் நீளமான beetroot என்பவையே அவையாகும்.

## உலகிலேயே உயரமான பெண் நாய்-கின்னஸில்




மிக உயரமாக வளரக்கூடிய நாய் இனம் கிரேட்டேன் ஜேர்மன் மாஸ்டிக் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த இனத்தை சேர்ந்த நாய் ஒன்றை அமெரிக்காவின் இலினாய்ஸ் மாநில அடிசன் நகரை சேர்ந்த ஆன் சப்லி என்பவர் வளர்த்து வருகிறார்.

நோவா என்று இதற்கு பெயர் வைத்திருக்கிறார். உலகிலேயே மிக உயரமான பெண் நாய் என்று இது சமீபத்தில் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது. ஏற்கனவே இந்த பெயரை பெற்றிருந்த நாய் இறந்துவிட்டதால் இந்த பெருமை நோவாவுக்கு கிடைத்துள்ளது.

மொத்தம் 5 அடி 11 அங்குல நீளம். இதன் அப்பா அம்மா கூட இந்தளவு நீளம் இல்லையாம். வாரத்துக்கு 13 கிலோ உணவு சாப்பிடுகிறது. வீட்டில் ஏதாவது விசேஷம் என்றால் தர்ப்பூஷணி வாங்கி கொடுப்பேன். ஆசையுடன் சாப்பிடும். 69 கிலோ எடை இருக்கிறது. குட்டியில் இருந்தது போலவே இப்போதும் கட்டிலில் என் கூடத்தான் படுத்து தூங்குகிறது என்றார் ஆன் சப்லி.

# புதிய 'நந்தன' வருடப்பிறப்பு கருமங்களும் பொதுப்பலன்களும்

## திருக்கணித பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| புதன் 03-16 யுரே 11-36 | சூரி 00-00 குரு 22-07 | சுக் 14-37 கேது 13-28 | |
| நெப் 08-24 | புதுவருட ஜாதகம் | | |
| சந்திரன் 01-33 | | | செவ்வாய் 09-39 |
| | ராகு 13-28 | லக் 15-21 சனி 02-19 | |

கரவருடம் பங்குனிமாதம் 31ஆம் திகதி (13.04.2012) வெள்ளிக்கிழமை முன்னிரவு 7.20 இல் 'நந்தன' என்னும் பெயருடைய புதுவருடம் பிறக்கின்றது.

அன்று நட்சத்திரம் உத்தராடம் 2ஆம் பாதம். திதி அபர அட்டமி. சித்தயோகம். இது 60 வருட சுற்றுவட்டத்தில் 26ஆவது வருடமாகும். அன்று பிற்பகல் 3.20 மணி முதல் முன்னிரவு 11.20 மணி வரை மேட சங்கிரமான புண்ணியகாலம் எனப்படும். வருடம் பிறக்கும் போது உதய லக்கினம் துலாம் ஆக அமைகிறது.

### கருமங்கள்

இப்புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்ப பூர்வமாக மருத்துநீர் தேய்த்து தலையில் புங்கமிலையும் காலில் ஆலிலையும் வைத்து ஸ்நானஞ்செய்து வெண்மஞ்சள் பட்டாயினும் அல்லது மஞ்சள் கரை வைத்த வெள்ளைப் புதுவஸ்திரமாயினும் தரித்து, வைரம் சேர்த்திழைக்கப்பெற்ற ஆபரணங்களையணிந்து விநாயகர் முதலிய இஷ்ட குலதெய்வங்களைத் தரிசனம் செய்து இயன்ற தானாதிகள் வழங்கி குரு, பெற்றோர் முதலிய பெரியோர்களை வணங்கி, அவர்கள் ஆசிபெற்று, விருந்தினர்களை உபசரித்து, சுற்றத்தினரிடமிருந்து கடுகு தாளிதஞ் செய்த புளியோதரை, தயிரன்னம், நெல்லிக்காய் துவையல் முதலியவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போஜனம் செய்து, தாம்பூலமருந்தி, சுகந்த சந்தன புஸ்பாதிகளையணிந்து நல்லனவற்றை அறிந்து சயனிப்பார்களாக.

மறுநாளாகிய சித்திரை முதலாம் திகதி சனிக்கிழமை அதிகாலையில் எழுந்து கண்ணாடி, பூரண கும்பம், தீபம் முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து முன்போல் ஸ்நானஞ்செய்து புதுவருட சூரியனுக்கு பொங்கல், பூஜை வழிபாடுகள் செய்து பிதிர் விரதானுசாரிகள் சிரார்த்தம், தர்ப்பணம் என்பன செய்து சுகந்த சந்தன புஸ்பாதிகளையணிந்து, விருந்தினர்கள், நண்பர்கள், சுற்றத்தாருடன் முன்போல் போசனஞ்செய்து தாம்பூலமருந்தி புதுவருடத்தில் ஆற்றக்கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்களகரமாக வாழ்வார்களாக.

### சங்கிரமதோச நட்சத்திரங்கள்

கார்த்திகை, மிருகசீரிடம் 3,4ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் கால்கள், உத்தரம், மூலம், பூராடம், உத்தராடம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் கால்கள்.

### கைவிசேடம்

15.04.2012 ஞாயிறு காலை 6.05 தொடக்கம் 6.50 மணிவரை

15.04.2012 ஞாயிறு முற்பகல் 8.00 தொடக்கம் 9.55 மணிவரை

16.04.2012 திங்கள் முற்பகல் 9.12 தொடக்கம் 9.48 மணிவரை

### பொதுப்பலன்கள்

சூரியன் 6ஆம் பாவத்தைப் பொருந்துவதுடன் சனியின் எதிர் திருஷ்டியையும் பெறுவதால் அரசியல் நிலைமைகளில் பல சச்சரவுகளும் பரஸ்பர விரோதங்களும் காட்டும். உயர் பதவியிலுள்ளோரின் மறைவுகள் ஏற்படும். 4ஆம் பாவத்தில் சந்திரன் இருப்பதால் மக்களுக்குப் போக்குவரத்து போன்ற பல வசதிகள் ஏற்பட்டாலும் திடீர் விபத்துக்களும் வாகன விபத்துக்களும் நடக்கும். புதன் 5ஆம் பாவத்தைப் பொருந்துவதால் கல்வித்துறை முன்னேற்றமடையும், கலாசாலைகள், பல்கலைக்கழகங்கள் சிறப்பாக இயங்கும், குரு 7ஆம் பாவத்தில் இருப்பதால் சமயாசார நிகழ்வுகள் சிறக்கும், ஆலய விழாக்கள் சிறப்படைவதோடு மதகுருமார் கௌரவிக்கப்படுவார்கள், சுக்ரன் 8 இல் ஆட்சி பெறுவதால் திருமணம் முதலிய மங்கல நிகழ்வுகள் கூடுதலாக இடம்பெறும். பொழுது போக்குத்துறை சார்ந்த கல்விகளும் முன்னேற்றமடையும். செவ்வாய் 11 இல் விவசாய முன்னேற்றத்தையும் அதிக விளைச்சலையும் கொடுக்கும்.

## வாக்கிய பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரியன் குரு | சுக்கிரன் கேது | |
| | நந்தன வருட ஜாதகம் | | |
| | | | செவ்வாய் |
| சந்திரன் | இராகு | | லக்கினம் சனி |

சித்திரைமாதம் முதலாம் திகதி (13.04.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.45 மணிக்கு அபரபக்க அட்டமித் திதியில் உத்தராட நட்சத்திரத்தின் முதலாம் பாதத்தில் சித்த நாம யோகத்தில் பாலவக்கரணத்தில் கன்னி இலக்கினத்தில் கடக நவாம்சத்தில் குரு காலவோரையில் சூரியன் சூக்குமவோரையில் தாமதகுண வேளையில் நட்சத்திரப் பட்சியாகிய கோழி உண்டித் தொழிலும் சூக்கும பட்சி உண்டித் தொழிலும் செய்யும் காலத்தில் இப்புதிய நந்தன வருடம் பிறக்கின்றது. அன்று பிற்பகல் 1.45 மணிமுதல் அன்று முன்னிரவு 9.45 மணிவரை விஷு புண்ணியகாலமாகும்.

### கருமங்கள்

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் கொன்றை இலையும் காலில் புங்கம் இலையும் வைத்து ஸ்நானஞ்செய்து நல்ல பச்சைப் பட்டாடையாயினும் வெள்ளைக்கரை அமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து பச்சை, மரகதம், வைரம் இழைத்த ஆபரணமணிந்து சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி விக்னேஸ்வரர் முதலிய குலதெய்வ வழிபாடு செய்து, சூரியனுக்குப் பொங்கல், பூசைகள் செய்து, குரு, பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசிபெற்று, பந்துமித்திரர்களுடன் அளவளாவி, அறுசுவை அமைந்த உண்டிகளுடன் பொரிகடுகு, பொரி எள், புளி, நெல்லிக்கனி என்பவை சேர்த்தருந்தி, தாம்பூலம் தரித்து, கண்ணாடி, தீபம், நிறைகும் முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து, நல்லவற்றைக் கேட்டும் வாசித்தும் பேசியும் அரிய தவத்தால் பெற்ற மானிடப் பிறவியில் செயற்பாலனவற்றை இனிது சிந்தித்து சுகமாக வாழக்கடவர்.

### மருத்துநீர் தயாரித்தல்

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திப்பிலி, சுக்கு இவைகளைசுத்த ஜலத்திலிட்டு காய்ச்சிக் கொள்க.

### சங்கிரம தோச நட்சத்திரங்கள்

கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் 1ஆம், 2ஆம் கால்கள், உத்தரம், மூலம், பூராடம், உத்தராடம்

### கைவிசேடம்

15.04.2012 ஞாயிறு முற்பகல் 8.42 தொடக்கம் 9.44 மணிவரை

15.04.2012 ஞாயிறு முற்பகல் 9.56 தொடக்கம் 11.54 மணிவரை

15.04.2012 ஞாயிறு பிற்பகல் 12.06 தொடக்கம் 2.02 மணிவரை

16.04.2012 திங்கள் முற்பகல் 9.10 தொடக்கம் 9.44 மணிவரை

16.04.2012 திங்கள் முற்பகல் 9.52 தொடக்கம் 11.47 மணிவரை

16.04.2012 திங்கள் பிற்பகல் 12.03 தொடக்கம் 1.58 மணிவரை

### பொதுப்பலன்கள்

மிகுதியான வெப்பம், முன் மழை சமம், பின்மழை அதிகம், கூடுதலான பூமியில் பயிரிடப்படுதல், சனங்களுக்கு நற்கருமங்களில் ஊக்கமிகுதி, உணவுப்பொருள் விருத்தி, வயோதிபர் கஷ்டம், திருடர்கள் அதிக தண்டனை பெறுதல், சுபபாசை கல்வி விருத்தி, சமய பிரயாசை மிகுதி, உலகத்தில் அதிர்ச்சியடையக்கூடிய சம்பவங்கள் நடைபெறுதலும் பயமும் உண்டாகலாம்.

# குழப்பங்களை விளைவிக்கவே சிலைகள் உடைக்கப்படுகின்றன

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கூறுகிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் இடம்பெற்ற சிலை உடைப்பு சம்பவங்களுக்கும் தமது கட்சிக்கும் தொடர்பில்லை என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அறிவித்துள்ளது. மகாத்மா காந்தி மற்றும் சாரணியர் சங்கத் தலைவர் பேடன் பவல் உள்ளிட்ட சிரேஷ்ட தலைவர்களின் சிலைகள் அண்மையில் உடைக்கப்பட்டன.

குறித்த சிலை உடைப்பு சம்பவங்களுக்கும் தமது கட்சிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பேச்சாளர் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

தமது கட்சி தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் கட்சி எனவும் இந்திய தேசத் தந்தையின் சிலையை உடைப்பது போன்ற இழி செயல்களில் தமது கட்சி ஈடுபடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் குழப்பங்களை விளைவிக்க முயற்சிக்கும் தரப்பினர் இவ்வாறு குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

உடைந்த சிலைகளை உடனடியாக திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உத்தரவிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# தியகம விளையாட்டரங்கும் மஹிந்த நிதியத்திற்கு சொந்தம்?

(கொழும்பு)

பொதுமக்களின் பணத்தில் இராணுவத்தை ஈடுபடுத்தி நிர்மாணிக்கப்பட்ட ஹோமாகம - தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு தற்போது மஹிந்த ராஜபக்ஷவின் நிதியத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது இந்த விளையாட்டரங்கு மஹிந்த ராஜபக்ஷ தலைவர் பதவியை வகிக்கும் மஹிந்தவின் தனிநபரின் நிதியத்திற்கு சொந்தமாகியுள்ளதாக நிதியத்தின் செயற்பாட்டாளரான மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.


இதனடிப்படையிலேயே குறித்த விளையாட்டரங்கின் உரிமம் குறித்த தகவல்களை வெளியிடுவதில் விளையாட்டுத்துறை அமைச்சு கடந்த காலங்களில் இழுத்தடிப்புக்களைச் செய்து வந்தது.

தியகம விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்கு பொதுமக்களின் பணம் பாரியளவில் செலவிடப்பட்டது.

அத்துடன் இதற்கான மனித வளம் இராணுவத் தரைப்படையிலிருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்த நிர்மாணப் பணிகளை இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோவே கண்காணித்து வந்தார்.

(அ-2)

# இந்திய - அமெரிக்கா கடற்படைகள் இரண்டு கட்டங்களாக கூட்டுப்பயிற்சி



(சென்னை)

இந்தியா- அமெரிக்கா கடற்படைகள் 1992 ஆம் ஆண்டு முதல் கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில் இரு நாட்டு கடற்படை வீரர்களும் 15 ஆவது கூட்டுப்பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.

இந்த கூட்டுப்பயிற்சி இரு கட்டங்களாக இன்று தொடக்கம் ஆரம்பமாகி எதிர்வரும் 16 ஆம் திகதி வரை சென்னை அருகே வங்கக் கடல் மற்றும் அந்தமான் நிக்கோபா கடலில் நடக்க இருக்கிறது.

இந்த கூட்டுப்பயிற்சிக்கு மலபார் 2012 என பெயரிடப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் ஊடுருவலை தடுத்தல், கடல் கொள்ளையர்கள் மீது தாக்குதல், ஏவுகணை தாக்குதல், நீர்மூழ்கி கப்பலை எதிர் கொள்ளுதல், என்கவுன்டர் தாக்குதல், போர் விமானம் மற்றும் ஹெலிகொப்டர் தாக்குதல் போன்ற பயிற்சியில் ஈடுபட உள்ளனர். இதே போல் கடலுக்கு வெளியேயும் பயிற்சிகள் இடம்பெறும்.

இதற்காக அமெரிக்காவில் இருந்து யுஎஸ்எஸ் கார்ல் விஷன் (சிவிஎன் 70), எஸ்எஸ் ஹர்லே, எஸ்எஸ் பங்கர் ஹில் ஆகிய போர்க்கப்பல்களும் மற்றும் நீர்மூழ்கி கப்பலும் நேற்று முன்தினம் சென்னை துறைமுகம் வந்தடைந்தன.

சென்னைத் துறைமுகத்தில் அமெரிக்க கடற்படை வீரர்களுக்கு பாரம்பரிய முறைப்படி சந்தனம் பூசி மலர்தூவி சால்வை அணிவித்து வரவேற்பு அளிக்கப்பட்டது.

சமீபத்தில் இலங்கைக் கெதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்ததால் இலங்கை சீனாவுடன் உள்ள நெருக்கத்தை மேலும் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் இலங்கையின் மேற்கு பகுதியில் உள்ள கடலில் சென்னை அருகிலும் இலங்கைக்கு கிழக்கே உள்ள அந்தமான் நிக்கோபா பகுதியில் இருக்கும் இந்திய கடல் பகுதியிலும் இந்தியா- அமெரிக்க கடற்படையினர் கூட்டுப் பயிற்சி நடத்துவது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சீனாவின் மக்கள் தொகையில் முதியோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(பீஜிங்)

தங்களது நாட்டில் முதியோர் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருவதாக சீனா தெரிவித்துள்ளது.

கடந்த 2001 கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள் தொகையில் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் 9.1 சதவீதம் பேர். அதாவது 12.30 கோடிப்பேர். இது இப்போது மேலும் அதிகரித்திருக்கும் என்றும் அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு,

நாட்டில் குழந்தைகள் பெற்றுக் கொள்வது தொடர்பான கெடுபிடியான கொள்கையால் குழந்தை பிறப்பு விகிதம் கணிசமான வீழ்ச்சி அடைந்து வருகின்றது. கடந்த 10 ஆண்டுகளில் குழந்தை பிறப்பு விகிதம் 1.07 சதவீதத்தில் இருந்து 0.57 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

அண்மையில் நடத்திய கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள் தொகையில் 16.6 சதவீதம் பேர் தான் 14 மற்றும் அதற்கு குறைவான வயதுடையவர்கள்.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் முதியோர் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகின்றது. இதே நிலை தொடர்ந்தால் அடுத்த 5 ஆண்டுகளில் மொத்த மக்கள் தொகையில் முதியோர் எண்ணிக்கை 16.7 சதவீதமாக இருக்கும். இது 2050 இல் 30 சதவீதத்தை எட்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக சீனா உள்ளது. அந்நாட்டின் மொத்த மக்கள் தொகை 134 கோடியாகும். (அ-2)

# இந்தியாவுடன் வர்த்தக உறவை மேம்படுத்த டில்லியில் பாகிஸ்தான் வர்த்தக கண்காட்சி

(திருச்சி)

இந்தியாவில் முதல் முறையாக கண்காட்சி நடத்த பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது. டில்லியில் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இக்கண்காட்சி நடைபெறும். இந்தியாவுடனான வர்த்தக உறவை மேம்படுத்தும் நோக்கில் இந்த கண்காட்சியை நடத்த பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது. இரு நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் இக்கண்காட்சியைத் தொடங்கி வைக்கின்றனர். இந்திய மக்கள் மீது பாகிஸ்தான் மென்மையான போக்கையே கடைப்பிடிக்கின்றது என்பதை வெளிப்படுத்தும் நோக்கில் இந்தக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் அரங்குகளை அமைக்கின்றன. ஆயத்த ஆடைகள், புடைவை, தளபாடங்கள், கைவினைப் பொருட்கள் உள்ளிட்டவை இக்கண்காட்சியில் இடம்பெறும். வாசனைப் பொருட்கள் உள்ளிட்டவையும் கண்காட்சியில் இடம்பெறுகின்றது. பாகிஸ்தானின் பாரம்பரிய உணவு வகைகளும் கண்காட்சியில் இடம்பெறும்.

பாகிஸ்தானில் மிகவும் பிரபலமான பொருள் தயாரிப்பு நிறுவனங்களும் இங்கு அரங்குகளை அமைக்க உள்ளன. இதன்மூலம் வர்த்தகத்தை பிரபலப்படுத்துவதோடு இந்திய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பண பரிவர்த்தனை வங்கி வசதியும் அரங்கில் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் அரங்கு அமைத்தவர்கள் கண்காட்சி மூலம் திரட்டப்படும் நிதியை டில்லியிலிருந்து பாகிஸ்தானுக்கு மாற்றிக்கொள்ள முடியும்.

இந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் வர்த்தக உறவை மேம்படுத்திக்கொள்ள பாகிஸ்தான் மிகுந்த ஆர்வமாக உள்ளது. இதற்கான வாய்ப்புகளும் அதிகமாக உள்ளன. அதிக மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் பாகிஸ்தான் தயாரிப்புகளுக்கு அதிக வர்த்தக வாய்ப்பு உள்ளது. இதை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. (அ-2)

# மலாவியில் புதிய ஜனாதிபதி தெரிவானார்



மலாவி ஜனாதிபதி பிங்குவா முத்தாரிகாவின் மறைவைத் தொடர்ந்து ஜாய்ஸ் பாண்டா புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்கவுள்ளார்.

தென்கிழக்கு ஆபிரி க்க நாடான மலாவியின் ஜனாதிபதி பிங்குவா முத்தாரிகா (வயது 78) விற்கு மாரடைப்பு ஏற்பட்டதால் தென் ஆபிரிக்காவுக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட போது வழியில் இறந்துள்ளார்.

இந்நிலையில் பிங்கு இறந்துவிட்டதாக மாலவி அரசு நேற்று முன்தினம் அதிகாரபூர்வமாக அறிவித்தது. இதனைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியாக ஜாய்ஸ் பாண்டா பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.துணை ஜனாதிபதியாக இருந்த இவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஜனநாயக மக்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். இதனால் இவருக்கு ஜனாதிபதி பதவி கிடைக்காது என தகவல் வெளியாகியது.

இந்த பிரச்சினைகயை சுமுகமாக தீர்க்கும்படி மலாவி அரசுக்கு அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் அறிவுறுத்தின.இதனையடுத்தும் ஜாய்ஸ் பாண்டா புதிய ஜனாதிபதியாக பதவியேற்றவுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி பிங்கு வாவின் மறைவை முன்னிட்டு 10 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# மீனவர் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை

## அமைச்சர் நாராயணசாமி

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினைக்கு தீர்வுகாண விரைவில் இருநாட்டு மீனவர்களுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் என மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார்.மின் பற்றாக்குறையை காரணம் காட்டி 2 ஆயிரம் மெகா வோட்சையும் தமிழகத்துக்கே ஒதுக்க வேண்டுமென தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதமாக தமிழக மற்றும் இலங்கை மீனவ சமுதாய தலைவர்களுடன் சுமுக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு எந்த எல்லை வரை யார் யார் மீன் பிடிப்பதுஎனதீர்மானிக்கப்படவுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்படும் என அவர் கூறினார். (அ-2)

# இலங்கைப் பிரச்சினை தொடர்பில் இந்தியா ராஜதந்திரத்தை கையாள்கிறது

## மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம்

இலங்கை அரசுக்கு எதிரான மனித உரிமை மீறல் குறித்த பிரச்சினையில் இந்தியா இராஜதந்திர நடவடிக்கையைக் கையாள்வதாக மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக ஐ.நா.வில் அமெரிக்காவின் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு, மத்திய அரசின் நிதிநிலை அறிக்கைக்குப் பாராட்டு தெரிவிக்கும் வகையில் திருச்சியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் பொறுப்புகள் உள்ளன. அதைக் காங்கிரஸ் மதித்து நடக்கிறது.

இலங்கையும் இறையாண்மை பெற்ற நாடு. எனவே அயல்நாடு தொடர்பான பிரச்சினையில் ஒவ்வொரு கட்டமாகத்தான் நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.மார்ச் 19 இல் அறிக்கை தயாரிக்கப்பட்டு அதைப் பிரதமர் வெளியிட்டார். மிகுந்த கவனத்தோடு அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

அந்தஅறிக்கை இந்தியாவுக்கு மட்டுமல்ல 46 நாடுகளுக்கும் விடுக்கப்பட்ட செய்தி. சில நாடுகளுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையே அது. இந்தியா தனது அறிக்கையை கவனமாகத் தயாரித்திருக்காவிடின் ஆதரவு, எதிர்ப்புநிலை மாறியிருக்கும். எனவேதான் மிகுந்த இராஜதந்திரதோடு இந்த விடயம் கையாளப்பட்டது என்றார். (அ-2)

# பனிப்பாறை சரிந்தது; 135 பேர் மாண்டனர்



(இஸ்லாமாபாத்)

இந்திய- பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய சியாச்சின் பனிமலைப்பகுதியில் பனிப்பாறைகள் சரிந்து பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் முகாம் மீது விழுந்ததில் 135 பேர் பலியாகி யுள்ளனர்.

இந்திய- பாகிஸ்தான் எல்லையில்சியாச்சின் பனி மலைப் பகுதி உள்ளது. அந்த இடத்தில் அந்நாட்டு இராணுவ வீரர்களின் முகாம் உள்ளது. நேற்றுமுன்தினம் காலையில் இந்தப் பகுதியில் திடீரென பனிப் பாறைகள் சரிந்து இராணுவ வீரர்கள் தங்கியிருந்த முகாம் மீது விழுந்தது. இதில் கேணல் ஒருவர் உட்பட பாக். இராணுவ வீரர்கள் 135 பேர் பனிப்பாறைகளின் அடியில் சிக்கி உயிரிழந்தனர். இதையடுத்து அங்கு மீட்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இது குறித்து பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் மேஜர் ஒருவர் கூறுகையில்,

சியாச்சின் பகுதியில் பனிப் பாறை சரிவில் சிக்கி இறந்த இராணுவ வீரர்களின் உடல்களை மீட்கும் பணி நடந்து வருகின்றது. மீட்புப் பணியில் பாக். இராணுவத்தினரும் உலங்கு வானூர்திகளும் மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (அ-2)

தீதும் நன்றும் பிறர் தர வாரா
நோதலும் தணிதலு மவற்றோ ரன்ன
~ புறநானூறு

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அவர்கள் ரெடி நாங்கள் ரெடியா?

நடக்கும் என்பார் நடக்காது. நடக்காதென்பார் நடந்துவிடும். இதுதான் உலக நியதி.

அந்த நியதிக்கு நாங்கள் மட்டும் விதிவிலக்கானவர்கள் அல்ல. எது நடக்கும், எது நடக்காமல் போகும் என்ற நிலைமைகளை எதிர்வு கூறல்கள் மூலம் கணித்துவிட முடியாது.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் கொண்டுவரப்படமாட்டாது என்று நினைத்தவர்கள் ஏராளம். அப்படியொரு தீர்மானம் வருமாக இருந்தால், அதனை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்று கூறியவர்களும் தாராளம்.

இவ்வாறு கூறியவர்கள் இப்போது இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களித்தது எதற்காக என்று ஆய்வு நடத்துகின்றனர்.

உண்மையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டில் இந்தியா ஒருபோதும் இருக்கவில்லை.

மாறாக தமிழகத்தின் முதல்வராக செல்வி ஜெயலலிதா இருந்ததினால் தமிழகம் முழுவதும் மத்திய அரசுக்கு எதிராகக் கொதித்தெழுந்தது.

தமிழகத்தின் முதல்வராக கலைஞர் கருணாநிதி இருந்திருப்பாராயின், மத்திய அரசு எடுக்கும் தீர்மானத்தில் மாநில அரசுகள் தலையிட முடியாது. அதேவேளை ஈழத்தமிழர்களுக்காக நாங்கள் கண்ணீர் விடாத நாட்களே இல்லை. வேண்டுமாயின் என் துணையாள் தயாளு அம்மாவை கேட்டுப்பாருங்கள்.

என் கன்னத்தின் ஓரத்தில் வடிந்த கண்ணீரை அவள் துடைத்துச் சோர்ந்து போனாள்.

வாழ்க்கைத்துணை என்பதன் அர்த்தத்தை அப்போதுதான் நான் உணர்ந்து கொண்டேன் என்று தழுதழுத்த குரலில் நன்றாக நடித்திருப்பார்.

ஆனால் முதலமைச்சராக செல்வி ஜெயலலிதா இருந்தமையால் அவரை விட தான் முந்திக் கொண்டு,

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்திய மத்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்பதை கலைஞர் கருணாநிதி மிகக் காரசாரமாக அழுத்தினார்.

மத்திய அரசு இதில் தவறு விடுமாயின் தமிழகம் தனிநாடாகும் வாய்ப்பு உண்டென்றும் அமைச்சர் சிதம்பரம், பிரதமர் மன்மோகனுக்குக் கூறிவைக்க,

எதுவும் செய்ய முடியாதநிலையில் இந்தியா ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்தது. இதுவே நிஜம்.

யாரும் நினைக்காதது நடந்து முடிந்துவிட்டது. வன்னிப்போர் நடந்தபோது ஒற்றுமையாக இருந்த இருநாடுகள் போர்க்குற்ற விசாரணை என்று வருகின்ற போது பிரிந்து கொண்டன.

இதுதான் அந்த இறைவனின் செயல்.

இப்போதுகூட பொருளாதாரத்தடை இலங்கைக்கு வரலாம். இது விடயத்தில் அவர்கள் (அமெரிக்கா, பிரிட்டன்) ரெடியாக இருக்கிறார்கள்.

அப்படிப் பொருளாதாரத்தடை வருமாக இருந்தால், அதற்கு ஈடுகொடுக்க நாங்கள் ரெடியா?

ரெடி என்று சொல்வதாயின் விதையாத வயல்களும் பயிர் செய்யப்படாத நிலங்களும் இருக்கவே முடியாது.

# இலங்கை மீது பொருளாதாரத் தடைவிதிக்க அமெரிக்காவின் கழுகுப்பார்வை திரும்புகிறது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடைவிதிப்பதற்கான அனைத்துவித நடவடிக்கைகளையும் அமெரிக்கா பலப்படுத்தி வருகின்றது. இத்தடை எந்நேரமும் வரலாம். எனவே இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயாராக வேண்டும். உள் நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதே இதற்கு சிறந்த உபாய மாகும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமர சேகர தெரிவித்துள்ளார்.

வல்லரசு நாடான அமெரிக்காவின் செயற்பாடுகளை எம்மால் ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது. மக்கள் அரசாங்கத்துடன் இருக்கும் வரை அந்நாட்டால் எமது தேசத்தை இரண்டாகப் பிரிக்க முடியாது. மக்கள் மஹிந்த தலைமையிலான அரசாங்கத்தை ஆதரிக்கும் நிலைப்பாட்டை கைவிட்டால் அது நாட்டை இரண்டாகப் பிரித்தே தீரும் என்றும் அவர் கூறியுள் ளார்.

இலங்கையின் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசேட அறிக்கை ஒன்றை அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் சர்வதேச போர்க்குற்றங்களுக்கான உயர்மட்ட அதிகாரி ஸ்டிபன் ரப் செனட் சபைக்கு சமர்ப்பித்துள்ள நிலையிலேயே தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கே அமெரிக்கா முயற்சிக்கின்றது. இந்த நடவடிக்கைக்காக இந்தியாவையும் குழப்பிவிட்டு அந்நாட்டை தமது பக்கம் இழுத்துள்ளது அமெரிக்கா. அமெரிக்காவின் எந்தவொரு நடவடிக்கையையும் எம்மால் கட்டுப்படுத்த முடியாது. அதுவே யதார்த்தமும் கூட. மக்கள் மஹிந்த அரசாங்கத்துடன் இருக்கும் வரை நாட்டை கூறு போடுவதற்கு அந்நாட்டினால் முடியாது. இதனை மக்கள் உணரவேண்டும்.

அடுத்ததாக இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடையை விதிப்பதற்கு தனது கழுகுப் பார்வையை வாஷிங்டன் இலங்கையை நோக்கி திருப்பியுள்ளது. இத்தடை எந்நேரமும் வரலாம். எனவே இந்தச் சவாலுக்கு மஹிந்த அரசாங்கம் முகம் கொடுப்பதற்கு தயாராகவேண்டும்.

இதற்கு உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதே சிறந்த உபாய மாகும். அமெரிக்காவின் சூழ்ச்சி மேகம் இன்று எமது நாட்டைச் சூழ்ந்துள்ளது. எனவே அரசாங்கம் எந்நேரமும் அவதானத்துடனேயே செயற்பட வேண்டும். அமெரிக்காவுக்கு எதிராகச் செயற்படும் நாடுகளுடன் எமது உறவைப் பலப்படுத்தி கொள்ள வேண்டும். எதிரிக்கெதிரி நண்பன் என்ற கொள்கையை மஹிந்த அரசாங்கம் பின்பற்ற வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் சிங்கள பௌத்த பேரினவாத அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு எதிரான கருத்துக்களையும் வெளி யிட்டு வரு கின்றமை தெரிந்ததே.

(அ-2)

# அரச ஊழியர்களுக்கு கடனடிப்படையில் வீடு

(பூநகரி)

தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் பூநகரிப் பிரதேசத்தில் கடமையாற்றும் காணி இல்லாத அரச ஊழியர்களுக்கு கடனடிப்படையில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தில் 50 அரச ஊழியர்கள் உள்வாங்கப்பட்டிருப்பதாக தேசிய வீடமைப்பு அதிகாரசபை அலுவலர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய ஜெயபுரம், முழங்காவில், தெளிகரை கிராமங்களிலுள்ள அரச காணிகளிலேயே இவ்வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சொந்தக்காணிகள் இல்லாத பூநகரிப் பகுதியில் கடமையாற்றும் அரச ஊழியர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-84)

# தமிழரின் உரிமைகளை வழங்காவிடின் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி வரும்

## துரைரட்ணம் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசு சர்வதேசத்தின் பிடியில் இருந்து தப்பிப்பிழைக்க வேண்டும் எனில் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இதனை அரசு ஒரு வருடத்திற்குள் நிறைவேற்றியே ஆக வேண்டும்.

அத்துடன் தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வழங்க அரசு முன்வர வேண்டும். இல்லையெனில் விபரீதங்களை எதிர்நோக்க வேண்டிவரும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரக் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவருமான க.துரைரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழரின் உரிமையை வென்றெடுப்பதற்கான முதற்படியை சர்வதேசநாடுகள் அமைத்துள்ளன. அமெரிக்கா, இந்தியா உட்பட 24 நாடுகள் இந்த படியை எமக்கு அமைத்துத் தந்துள்ளன. இந்த நாடுகளுக்கு எமது நன்றிகள்.

சுமார் 62 வருடங்களாக தொடர்ந்து நடைபெற்ற அகிம்சைப் போராட்டம் மற்றும் ஆயுதப் போராட்டத்தின் விளைவாகவே தமிழர் பிரச்சினை இன்று சர்வதேச ரீதியில் ஓங்கி ஒலித்துள்ளது.

இதனால் இன்று அரசு சர்வதேசத்தின் வலைக்குள் சிக்கித் தவிக் கின்றது. சர்வதேச அரங்கில் அவமானப்பட்டு கொண்டிருக்கின்றது.

தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் விடுதலை தொடர் பாக நான் மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தற்போது இருக்கும் அனைத்து எம்.பிக்களும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் அறிக்கைகளை பல தடவை விட்டிருக்கின்றோம். ஆனால், அரசிடமிருந்து சரியான பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

விசாரணை எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி களையாவது உடன் விடுவிக்க அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும் என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடாகும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தெரிவித்தார். (எ-11)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உனது தேவை சுயநம்பிக்கை



ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படுவதையும் வெறுப்பதையும் விட்டுவிட்டு ஒருவருக்கொருவர் பூஜிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

மனதுக்குப் பிடித்த வேலையைச் செய்ய மூடனாலும் முடியும். எந்த வேலையையும் தன் மனதுக்குப் பிடித்ததாகச் செய்பவன் அறிவாளி.

பிறர் நலனுக்காகச் சிறிது பணிசெய்தாலும் உனக்குள் உள்ள சக்தி விழித்துக்கொள்ளும். பிறருக்காக சிறிது சிந்தித்தாலும் உன் உள்ளத்தில் சிங்கத்தின் பலம் வந்துசேரும்.

பணத்தால் எதுவும் ஆவதில்லை. பெயரால், புகழால், கல்வியால் எதுவும் ஆவதில்லை. அன்பால் அனைத்தும் நிறைவேறும்.

எவரையும் நீ கெட்டவன் என்று சொல்லாதே. நீ நல்லவன்தான். இன்னும் நல்லவனாகு என்றுதான் கூறவேண்டும்.

உன்னை நீயே வெறுக்காமலிருப்பதுதான் முதற்கடமையாகும். முன்னேற்றமடைய முதலில் சுயநம்பிக்கை அவசியம் தேவை.

# எழுவைதீவு துறைமுகத்தை உடன் புனரமைப்பு செய்ய நடவடிக்கை

## சில்வேஸ்திரி அலென்ரின் எம்.பி. பணிப்பு

(கொழும்பு)

மக்களின் போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு எழுவைதீவு துறைமுகத்தை உடன டியாக புனரமைப்பு செய்யுமாறு அங்குள்ள சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெ ன்ரின் பணிப்புரை விடுத்துள்ளார்.

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று முன் தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதேவேளை, அனலைதீவில் மின்விநி யோகம் வழங்கப்படாத இடங்களுக்கு வடக் கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின்விநி யோகம் வழங்கப்படும் என அவர் உறுதிய ளித்ததுடன் ஊர்காவற்றுறை பிரதேச செய லர் பிரிவின் சகல பகுதிகளுக்கும் மின்விநி யோகம் மேற்கொள்வதற்கான நடவடிக்கை கள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனுடன் ஊர்காவற்றுறை, காரைநக ருக்கான பாதைச் சேவையில் காலை 8.30, மாலை 6.30 ஆகிய நேரங்களில் மேலதி கமாக இரு சேவைகளை நடத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு சம் பந்தப்பட்டவர்களிடம் பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை, ஊர்காவற்றுறை நகரு க்கான பஸ் தரிப்பிடமொன்றை அமைப்பத ற்காக 10 இலட்சம் ரூபா நிதி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முய ற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்துறைமுகத்தை மீள ஆரம்பிப்பதால் அனலைதீவு, எழுவைதீவு பிரதேசங்களுக் கான பயணிகள் எதிர்கொள்ளும் இடையூ றுகளை வெகுவாக குறைக்க முடியும் என பொதுமக்கள் தெரிவித்தனர். (அ-2)

# மருதங்கேணி பொதுச்சந்தையின் நிர்மாண வேலைகள் தாமதம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கின் மருதங்கேணி பொதுச் சந்தை நிர்மாண வேலைகள் ஒரு வருடமாகியும் பூர்த்தி செய்யப்படாத நிலை காணப்படுகின்றது.

இவ்வேலை கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டு ஆவணி மாதத்துடன் முடிவுறவேண்டிய நிலையில் இன்னும் பூர்த்தியாகாத நிலை காணப்ப டுவதால் மக்கள் விசனம் தெரிவித்துள் ளனர். அப்பகுதியில் பொதுச் சந்தை இன் மையால் தமது உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யவோ நுகர்வோர் தேவை யான பொருட்களை கொள்வனவு செய் யவோ முடியாத அவலநிலை காணப்படு கின்றது.

எனவே, உரிய தரப்பினர் விரைவாக இச் சந்தையை நிர்மாணித்து மக்கள் பாவனை க்கு திறந்து உதவுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-10)

# என்மீது நம்பிக்கை இல்லையா நான் போகிறேன் விடுங்கள்!

## அமைச்சர் மேர்வின் கூறுகிறார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி குறித்து தான் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளதாக பொது மக்கள் தொடர்பு மற்றும் பொதுசன விவகார அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள் ளார்.

எனினும் கட்சிக்கு தன்மீது நம்பிக்கை இல்லாவிட்டால் ஒரு நொடிப்பொழுதேனும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருக்க தான் விரும்பவில்லை என அமைச்சர் குறிப்பிட் டுள்ளார்.

களனி பகுதியில் இடம்பெற்ற புதுவருட நிகழ்வொன்றில் நேற்றைய தினம் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அண்மையில் ஜெனீவா சென்ற மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களின் கை, கால்களை உடைப்பேன் என்று கருத்து தெரிவித்திருந்தமைக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி விசாரணை செய்து ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# உடைத்தவனைக் காப்பாற்ற உடைந்தவைக்கு சிகிச்சையா?

## கேள்வி எழுப்புகிறார் அரியநேத்திரன் எம்.பி.

மட்டக்களப்பில் உடைக்கப்பட்ட மகாத்மா காந்தி சிலையை அவசர அவசரமாக திருத்து வதன் மர்மம் என்ன? சிலைகளை உடைத் தவர்கள் யார் என விசாரனைகள் மேற்கொள் ளப்படுவதற்கு முன்னர் சிலையை திருத் துவதன் மூலம் உடைத்தவர்களைக் காப் பாற்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறதா என மட்டு. மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கேள்வி எழுப் புகின்றார்.

மட்டக்களப்பு நகரின் முக்கிய இடங்களில் வைக்கப்பட்டிருந்த நான்கு பெரியார்களின் சிலைகள் அண்மையில் இரவு நேரத்தில் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள் ளன.

மகாத்மா காந்தி, சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் பேடன் பவல், சுவாமி விபுலாந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகிய பெரியார்களின் சிலைகளே இவ்வாறு உடை த்து சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இச் சிலைகள் உடைக்கப்பட்டது தொடர்பாக பா.அரிய நேத்திரன் எம்.பியி டம் கேட்டபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது, மட்டக் களப்பிலுள்ள தந்தை செல்வாவின் சிலை ஆறு மாதங்களுக்கு முன்னர் உடைத்து சேதப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் சுவாமி விபுலாநந்தரின் சிலை வைக்கப்பட்டு சில மணித்தியாலங்களுக்குப் பின்னர் உடைக் கப்பட்டது. இந்தச் சிலை புதிதாக வைக்க ப்பட்டு 48 மணித்தியாலங்களுக்குள் இந்த நான்கு பெரியார்களின் சிலைகளும் உடைக் கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத் தவும், படையினரின் இருப்பை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வதற்காகவும் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம். ஒரு வருட த்துக்கு முன்னர் கிறீஸ் பூதங்கள் என மக்கள் அச்சுறுத்தப்பட்டனர். அதன் பின்னர் இது போன்ற சிலைகளை உடைத்து சேதமாக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என அவர் தெரிவித்தார். (அ-2)

# வவுனியா மெனிக்பாம் முகாமில் கொள்ளை

## சந்தேகத்தில் ஒருவர் கைது


வவுனியா செட்டிக்குளம், மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் அமைந்துள்ள வீடொ ன்றில் தங்க நகைகள் மற்றும் பணம் என்ப வற்றை கொள்ளையிட்ட பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

குறித்த வீட்டில் இருந்து ஒரு இலட்சத்து 84 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகை களும் இரண்டாயிரம் ரூபா பணமும் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கொள்ளை யிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இது குறித்து செட்டிக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அப்பிரதேசத்தில் உள்ள பெண் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய் யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து களவாடப்பட்ட பொருட்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். சந்தேகநபரான குறித்த பெண் இன்று வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆஜ ர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

(அ-2)



வல்வெட்டித்துறை கம்பர்மலை கலை வாணி சனசமூக நிலையத்திற்கு அரு காமையிலுள்ள வீடொ ன்றில் வாழை ஒன்று குலை போட்டது.

அவ்வாழைக் குலையிலுள்ள வாழைப் பொத்தியை அண்மையில் வெட் டிய போது வீழ்ந்த பொத்தியிலிருந்து வாழைச்சீப்புக்கள் கொண்ட 19 வாழைப் பொத்திகள் மீண்டும் வெளித்தள்ளியிருப் பதைப் படத்தில் காண லாம்.




ஜெய்குருதேவ்

எப்போதும் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் வாழ, வாழ்க்கையில் உற்சாகம் பெற, தன்னம்பிக்கை, தைரியம் பெற, சிறந்த படைப்பாற்றலுடன் விளங்க, கல்விப் பணியில் முன்னேற்றம் பெற, குடும்பத்திலும் சமூகத்திலும் நல்லுறவுபெற, ஆஸ்துமா, ஒற்றைத்தலைவலி மாற வாழ்க்கை வைபவமாக மாற

**வாழும் கலைப் பயிற்சி**

பிராணாயம ,வஸ்த்திரிக்கா, சுதர்சன கிரியா, யோகா, மூச்சுப்பயிற்சியும் தியானமும்.

**09.04.2012 அறிமுகவுரை 5 மணிக்கு**


இடம்: மகேஸ்வரன் மணிமண்டபம்
பயிற்சி: 09.04.2012-15.04.2012
நேரம்: காலை 6.00-8.30, 10.00-12.30
மாலை 2.00-4.30, 5.00-7.30

*முன்பதிவு அவசியம்*

தொடர்புகளுக்கு:- 0777740593
0770474757

(8135)

# புனே வாரியர்ஸ் 22 ஓட்டங்களால் பஞ்சாப்பை வெற்றி கொண்டது



ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா கடந்த 4-ம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

இதன் 8-வது லீக் ஆட்டம் மகாராஷ்ட்ரா மாநிலம் புனேயில் நடைபெற்றது.

இதில் கங்குலி தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியும் அடம் கில்கிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற புனே வாரியர்ஸ் அணியின் தலைவர் கங்குலி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய அணித் தலைவர் கங்குலி 20 ஓட்டங்களையும் ஜெஸி ரைடர் 8 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து களமிறங்கிய மார்லன் சாமுவேல்ஸ் 46 ஓட்டங்களும் றொபின் உத்தப்பா 40 ஓட்டங்களும் எடுத்து அணியின் எண்ணிக்கையை உயர்த்தினர்.

பின்னர் களமிறங்கிய பெர்குசன் 3 ஓட்டங்களிலும் ஸ்ரீவன் சிமித் 25 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் புனே வாரியர்ஸ் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 166 ஓட்டங்களை எடுத்தது.

அடுத்து 167 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 144 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

இதனால் புனே வாரியர்ஸ் அணி 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதற்கு முன்பு நடைபெற்ற 4-வது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியுடனும் பஞ்சாப் அணி தோல்வியை சந்தித்தது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக புனே அணியின் சாமுவேல்ஸ் தெரிவானார்.

**இன்றைய போட்டி:**
மாலை 4 மணிக்கு விசாகப்பட்டினத்தில் நடைபெறும் போட்டியில், டெக்கான் சார்ஜர்ஸ் எதிர் மும்பை இந்தியன்ஸ் மோதுகின்றன.

# மீண்டும் வெற்றி பெற்றது ராஜஸ்தான் றோயல்ஸ்



ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கெதிரான நேற்றைய ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐந்தாவது ஐ.பி.எல் இருபது-20 கிரிக்கெட் தொடரின் 7-வது போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ்-கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் ஜெய்பூரில் உள்ள சவாய் மன் சிங் மைதானத்தில் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனையடுத்து ராஜஸ்தான் றோயல்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

கடந்த போட்டியில் அதிரடியாக விளையாடி ஆட்டநாயகன் விருது பெற்ற ரகானே ஓட்டங்கள் எதுவும் இன்றி ஆட்டமிழந்தார்.

மற்றொரு தொடக்க வீரரான அணித்தலைவர் ராகுல் டிராவிட் 26 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்த களமிறங்கிய ஸ்ரீவத் கோஸ்வாமி 23 ஓட்டங்களில் ஆட்டமிழக்க பின்னர் களமிறங்கிய அசோக் மெனாரியா 40 ஓட்டங்களும், பிராட் ஹொட்ஜ் 44 ஓட்டங்களும் எடுத்து அணியின் எண்ணிக்கையை உயர்த்தினர்.

இறுதியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை எடுத்தது.

இதனையடுத்து 165 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி களமிறங்கியது.

தொடக்க வீரர்களான ஜக் கலீஸ் 5 ஓட்டங்களில் சிங் பந்திலும், பிரண்டன் மக்கலம் 2 ஓட்டங்களில் சவான் பந்திலும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து களமறங்கிய அணித் தலைவர் கௌதம் காம்பீரும் ஓட்டங்கள் எதுவுமின்றி சிங்கின் பந்தில் கோஸ்வாமியிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய டிபாட்ரா தாஸ் 12 ஓட்டங்களிலும், யூசுப் பதான் 15 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க பின்னர் களமிறங்கிய பிரெட் லீ அதிரடியாக துடுப்பெடுத்தாடி 11 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.


சிறப்பாக விளையாடிய மனோஜ் திவாரி 59 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜெகன் போத்தாவின் கடைசிப் பந்தில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

இதனால் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சொந்த மண்ணில் மீண்டும் சாதித்தது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக பிரட் ஹெட்ஜ் தெரிவானார்

# புற்றுநோய் சிகிச்சை முடிந்தது; யுவராஜ் இன்று நாடு திரும்புகிறார்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர் யுவராஜ் சிங், நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். இதையடுத்து அவர் அமெரிக்காவின் பாஸ்டன் நகர மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கடந்த மாதம் மருத்துவமனையில் இருந்து வெளியேறினார்.

அதன்பிறகு லண்டனில் தங்கியிருந்த யுவராஜ் சிங், இன்று நாடு திரும்ப இருப்பதாக டுவிட்டர் இணையத்தளத்தில் கூறியுள்ளார். இறுதியாக அந்த நாள் வந்திருக்கிறது. இன்று வீட்டுக்குப் போகப் போகின்றேன். எனது நண்பர்களையும், குடும்பத்தினரையும் காண்பதற்கு ஆவலாக உள்ளேன் என்று யுவராஜ் சிங் எழுதி உள்ளார்.

நாடு திரும்பும் யுவராஜை உற்சாகத்துடன் வரவேற்க நண்பர்கள் தயாராகி வருகின்றனர். யுவராஜ் சிங், நாடு திரும்பியதும உடனடியாக விளையாடமாட்டார்.

இந்த ஆண்டின் இறுதியில் அவர் விளையாடுவார் என்று கூறப்படுகின்றது. நாடு திரும்பிய பிறகு தனது எதிர்கால திட்டங்கள் குறித்து அறிவிப்பார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

## முஸ்லிம்...

மேற்கொள்ளவுள்ளதாக பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

இதற்காக முதலில் சவுதி அரேபியாவுக்கு செல்வதாகவும் அதன் பின்னர் ஏனைய முஸ்லிம் நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு அந்நாட்டு தலைவர்களை சந்தித்து ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் ஆகியவற்றின் நன்றிகளை தெரிவிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சவுதி அரேபியாவிற்கான விஜயத்தின் போது அந்நாட்டு மன்னர் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்களை சந்தித்து ஜனாதிபதியின் நன்றிகளை தெரிவிக்க உள்ளதாக பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-11)

## கிழக்கு...

அவசர விசாரணை நடத்துமாறும் அவர் கோரினார். கிழக்கு மாகாண முதலமைச்சர் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கவனத்துக்கும் இந்திய உயர்ஸ்தானிகர் கொண்டு சென்றார் என அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (எ-11)

## திருமலை...

தனது மகன் கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை தனியார் மருத்துவமனைக்கு வானில் சென்றவேளையில் அவரின் வானில் இருந்து இறக்கப்பட்ட மற்றொரு வானில் கொண்டு சென்றதாகவும் இதுவரையும் வீடு திரும்பவில்லையெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக திருகோணமலை பொலிஸில் தான் முறைப்பாடு செய்துள்ளதாக அவர் கூறினார். மூன்று பெண் பிள்ளைகளின் தாயாரான தனக்கு, கடத்தப்பட்டவர் மாத்திரமே ஒரேயொரு புதல்வர் எனவும் தனது கணவர் இறந்த பின்னர் தமது குடும்பச் சுமையை இவரே கவனித்து வந்ததாகவும் அவர் கூறினார். (எ-11)

## குமார் குணரட்ணத்தை...

நடத்த ஒழுங்கு செய்திருந்த நிலையிலேயே பிரேம்குமார் குணரட்ணமும், அந்த அமைப்பின் மகளிர் பிரிவு பொறுப்பாளர் திமுது ஆட்டிகலவும் கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

தான் இலங்கைக்கு வந்திருந்தபோது, விமான நிலையத்தில் 18 மணித்தியாலம் தடுத்துவைக்கப்பட்டு, தனது கணவரின் இருப்பிடம் உள்ளிட்ட விபரங்கள் குறித்து கடுமையாக விசாரிக்கப்பட்டதாக டாக்டர் சம்பா குணரட்ணம் தெரிவித்தார்.

இதற்கிடையே, குமார் குணரட்ணத்தின் உறவினர்களும் அவரது கட்சி உறுப்பினர்களும் கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகவிலாளர்கள் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார்கள்.

குமார் குணரட்ணத்தின் சகோதரர் ரஞ்சிதம் குணரட்ணம் 1989ல் படுகொலை செய்யப்பட்டார்.

குமார் குணரட்ணம் அரச படைகளாலேயே கடத்தப்பட்டிருக்கலாம் என்று அவரது தாயார் வீ.ஆர்.குணரட்ணமும், அவரது சகோதரி நிரஞ்சனி குணரட்ணமும் கூறினார்கள்.

ஆனால் இக் குற்றச்சாட்டை இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகாரங்களுக்காக பேசவல்ல அதிகாரி லக்ஷ்மன் ஹுலுகல்ல மறுத்தார்.

இலங்கை பொலிஸார் காணாமல்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, காணாமல் போனவர்களின் குடும்பங்கள் சார்பில் போராட்டமொன்றை ஒழுங்கு செய்ய சென்றிருந்தபோது, மக்கள் போராட்ட இயக்கத்தைச் சேர்ந்த குகன் முருகானந்தம், மற்றும் லலித்குமார் வீரராஜ் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் காணாமல் போயிருந்தார்கள்.

அவர்கள் இலங்கைப் படையினரின் தடுப்பில் இல்லை என்று நீதிமன்றத்தில் அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அரசாங்கம்-...

பேச்சுவார்த்தை ஸ்தம்பிதம் அடைந்தமைக்கான முக்கிய காரணம் அரசின் நிலைப்பாடும், அரசின் போக்குமே என நான் சென்றவாரம் கூட பாராளுமன்றத்தில் திட்டவட்டமாக தெளிவாக கூறியிருந்தேன்.

நாங்கள் ஆக்கபூர்வமான வகையில் செயற்பட்டும் அரசாங்கத்தின் போக்கு காரணமாக பேச்சுவார்த்தையை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாது போய்விட்டது.

இந்நிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்ற விடயம் எமது கட்சிக்குள் பாராளுமன்ற குழு பற்றி பேசப்பட்ட விடயம் அல்ல.

நாங்கள் பல விடயம் தொடர்பாக பேசி இருக்கின்றோம். ஆனால் அந்த விடயம் தொடர்பாக எந்த முடிபும் எடுக்கவில்லை.

நான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை அல்லது தேவையில்லை என்ற கருத்தை எப்பொழுதும் யாருக்கும் கூறவில்லை.

மத்தியஸ்தம் தேவை என்ற முடிபையும் நாங்கள் எடுக்கவில்லை. தேவையில்லை என்ற முடிபையும் நாங்கள் எடுக்கவில்லை.

பேச்சுவார்த்தை முன்னேற்றம் அடையாததன் காரணமாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

இது அவரின் தனிப்பட்ட கருத்து அதனைக் கூற அவருக்கு பூரண சுதந்திரம் உண்டு ஆனால் கூட்டமைப்பு இது தொடர்பாக எந்த முடிபும் எடுக்கவில்லை.

நாங்கள் என்ன செய்யப் போகின்றோம் என பகிரங்கமாக ஊடகங்களுக்கு சொல்ல முடியாது செய்யும்போது பாருங்கள் என அவர் கூறினார். (எ-11)

# புலிகள் இயக்கம் வாழ்வதை...

கிண்ணியா நகர சபைத் தவிசாளர் எம்.எம். ஹில்மி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் நூற்றும் மேற்பட்ட தமிழ் சகோதரர்கள் வந்து அவர்களின் போராட்டங்களின் நியாயங்களையும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் தொடர்பாகவும் கருத்துக்களை முன்வைத்தனர்.

அந்த மாநாட்டில் பல மொழிகளைப் பேசுகின்ற தமிழ் சகோதரர்களைக் கண்டோம். 15 மொழிகள் பேசுபவர்கள் கூட அங்கு கலந்து கொண்டு தமிழ் இனத்திற்காக குரல் கொடுத்தார்கள். தமிழ் மக்களை அழைத்து பல்வேறு கூட்டங்களை அந்த பேரவையில் நடத்தினார்கள்.

தமிழீழத்துக்காக போராடியது புலிகள் இயக்கம். 'அதேவேளை இந்தியா மூலம் பெற்றுக் கொடுக்க வந்த அதி கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபை முறைமை இந்த இரண்டு தீர்வுகளும் ஏதோ ஒரு வகையில் பின்னடைந்திருப்பதை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது.

எனினும் அமெரிக்காவும் மேற்கத்தேய நாடுகளும் ஏதோ ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிசெய்து கொண்டிருப்பதை உங்களுக்கு சொல்லி தெரிய வேண்டியதில்லை. இந்த வகையில் தமிழ் மக்களின் பிரச்சினை பெரிதாகப் பேசப்படுகின்ற சர்வதேச பிரச்சினையாக இன்று மாறியிருக்கின்றது. தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று சர்வதேசம் பேசுகின்ற அளவுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை விஸ்பரூபம் எடுத்திருக்கின்றது.

இது எதைச் சொல்கிறதென்றால் ஒரு இனத்தின் உரிமைப் போராட்டம் அழிந்து சென்றாலும் அவர்களின் இழப்புக்களும், தியாகங்களும் அவர்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் என்ற உண்மையை புலப்படுத்துகின்றது.

இந்த வகையில் முஸ்லிம் சமூகம் ஆயுதம் ஏந்தி தங்களுக்கு ஒரு நாடு தேவை அல்லது ஒரு மாவட்டம் தேவை அல்லது ஒரு பிரதேசம் தேவை என்று போராடவில்லை. தவிர காணி அதிகாரமோ பொலிஸ் அதிகாரமோ கேட்கவில்லை. இருந்த போதும் முஸ்லிம் சமூகம் பல பாதிப்புக்களையும் அநியாயங்களையும் எதிர்கொண்டு சொத்துக்களையும் இழந்தது.

இன்று இந்த அரசாங்கத்தோடு எல்லா முஸ்லிம் கட்சிளும் இணைந்திருக்கின்றன. இந்த நாடு இரண்டாகப் பிளவுபடுவதை முஸ்லிம் சமூகம் ஒரு போதும் அனுமதிக்கவில்லை. இந்த நாட்டில் விசுவாசம் கொண்ட முஸ்லிம்கள் இன்று எதிர்நோக்குகின்ற பூர்வீகக் காணி தொடர்பான பிரச்சினைகள் எமக்கு கவலையளிக்கின்றன.

கிண்ணியா பிரதேச மக்கள் எதிர்நோக்குகின்ற காணி தொடர்பான பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்து தீர்த்து வைப்பேன் என உறுதி அளிக்கின்றேன். எங்களுடைய சமூகத்தின் நிலை மிக மோசமாக பின்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. எங்களுடைய பிரச்சினைகள் பற்றி இலங்கையில் பேசுவதற்கு யாரும் இல்லை. அத்துடன் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கும் யாரும் இல்லை.

முஸ்லிம் அரசியல் வாதிகள் தங்களுடைய பதவிக் காலங்களை தங்களின் சுகபோகங்களுக்காக மாற்றியமைத்து சமூகத்தை ஏமாற்றும் பேர்வழிகளாக மாறியுள்ளனர்.

யுத்தத்தால் முஸ்லிம்கள் இழந்த உரிமைகளையும் இழப்புக்களையும் மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்குக்கூட மக்கள் ஆணையைப் பெற்றிருக்கின்றோம் என்று கூறிக் கொண்டிருக்கின்ற நாடாளுமன் உறுப்பினர்கள் வாய்பேச முடியாது மௌனித்துப் போய் இருக்கின்றார்கள்.

காணிப்பிரச்சினை கிண்ணியாவில் மட்டுமல்ல அம்பாறையில் பாரிய பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. இன்று சிறுசிறு விடயங்களைக் கூட கையாள்வதற்கு ஒரு சரியான அரசியல் தலைமைத்துவம் இல்லாத நிலை காணப்படுகின்றது என்றார். (எ-11)


## மரண அறிவித்தல்

### திருமதி திரேசம்மா தேவதாஸ் (சறோ)

கரம்பன் தெற்கினை பிறப்பிடமாகவும் சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா தேவதாஸ் 08.04.2012 நேற்று ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - லூட்ஸ் மேரிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் ம.யோ. அரசரட்ணம், திருமதி ஞானப்பு அரசரட்ணம் ஆகியோரின் அன்பு மருமகளும் ஜோசப் தேவதாஸின் (ஓய்வு பெற்ற ஆய்வுகூட உதவியாளர்- யாழ். மத்திய கல்லூரி) அன்பு மனைவியும் T. டனியலா துஸ்யந்தி, A.J. கீதாஞ்சலி ஆகியோரின் அருமைத் தாயாரும் அன்ரன் ஜெயறாஜின் அன்பு மாமியாரும் கிறிஸ்ரிகாவின் அருமைப் பேர்த்தியும் M.F. சேவியர், டெய்சி அன்னமலர், Dr. ம.யேசுதாசன், M. கொன்சால்வே (பாலன்), மரியராஜேஸ்வரி (ராஜி), தோமஸ் றெஜி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 11.04.2012 புதன்கிழமை இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

43, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
TP:- 0771451490

தகவல்: T. தேவதாஸ் (கணவர்)
கீதாஞ்சலி அன்ரன் ஜெயறாஜ் (மகள்)

(8140)


# சகதிக்குள் புதையுண்ட...

குச்சென்ற இரண்டு சிறுவர்களையும் காணாத நிலையில் அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் தேடுதலில் ஈடுபட்டனர்.

எனினும் சிறுவர்களை கண்டு பிடிக்க முடியவில்லை. இந்நிலையில் அவர்களின் கால் அடையாளங்களை அவதானித்துச் சென்ற போது அவர்கள் அருகில் உள்ளசேற்றுக்குளத்திற்குள் சென்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குளத்தினுள் நீண்ட நேரம் தேடியபோது சகதிக்குள் புதையுண்ட நிலையில் அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட சடலங்கள் உடனடியாக மிருசுவில் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து சாவகச்சேரி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதுகுறித்து கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். உயிரிழந்த இரண்டு சிறுவர்களதும் தந்தையர்கள் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11,85)


இறுக்கமானது பிரித்தானியா Student Visa சட்டம்
வேலைவாய்ப்பென்ற பேச்சுக்கே இடமில்லை

எனவே, ஆஸ்திரேலியா சென்று கல்வி கற்போமா?

பின்வரும் மேலதிக வசதிகள் எமது ஆலோசனையுடன் உங்களிற்கு வழங்கத் தயாராக உள்ளோம்.

- விமான நிலையத்தில் சென்று இறங்கியவுடன் அழைத்துச் செல்லல்
- குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதி
- பகுதி நேரத் தொழில் வாய்ப்புகளிற்கான ஆலோசனை

ஆலோசனைகளுக்கு.....

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 021 221 9016
(சனி, ஞாயிறு, பொதுவிடுமுறை நாட்கள் உட்பட எல்லா நாட்களும் திறந்திருக்கும்)
புதுவருட தினத்தன்று ஆலோசனை பெறுபவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.

- 23 1/3, மகேஸ்வரி லேன், கொழும்பு 06. ☎ 0112366925
- 115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. ☎ 0212285544
- மெல்போன், ஆஸ்திரேலியா. Land line ☎ 0061390437100

(8134)



## உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



தமிழ் புத்தாண்டை முன்னிட்டு
விசேட கட்டணங்கள்

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு),
கடல் உணவு, மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும், வெளிநாடுகளில் மேலதிக கட்டனம் அறவிடப்படமாட்டாது.

மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD, Vedioகள் என்பன மிக விரைவாக அனுப்பி DHL

நீங்கள் உங்கள் இல்லங்களில் இருந்தவாறே உள்நாடு,வெளிநாடுகளுக்கான DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள (Door to door Service)
அழையுங்கள் 021 222 7835, 0719554528

5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு
கனடா - 1 kg - 500/=
சுவிஸ் - 1 kg - 400/=

திருமுருகன் கொம் நெற்

DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்

TCN Express
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2

இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18. பிரதான வீதி. நெல்லியடி. இல. 05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.



KT Keerthika Textiles
கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
தொ.பே:-0772288245

புது வருடத்தை முன்னிட்டு
புடவைத் தினுசுகள், பட்டு வேட்டிகள், ஸ்கேட் & பிளவுஸ்
மனங்கவரும் சல்வார் கமிசுகள், சேட்டிங் சூட்டிங்
ஆண்கள்,பெண்கள், சிறுவர்கள், சிறுமிகளுக்கான ஆடைகளைத் தெரிவு செய்ய சிறந்த ஸ்தாபனம்



Palaly Road,
Urumpirai Junction

(C-6306)



புது வருடத்தை முன்னிட்டு விசேட கட்டணச்சலுகை 09.04.2012 - 19.04.2012

- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் UK 630 /= Germany 720/= France 760/=
- மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
- கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.

சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு : சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினை பெற்றுக்கொள்ளலாம்.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ் T.P : 021 222 6113

Arrul Global Express
International Courier & Cargo Service


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.